Reg. No. M. 3066 1938- தாள் 1

"PAHUTHARIVU"

(REASON)

பகுதி 4. இதழ் 4.

கலிப்பிரி

ஜூலை அரை 0—1—6

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

விருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கையசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடமைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை

	பக்கம்.
சுதந்திரச் சீரம் (பாட்டு)	1
இந்திப்புரட்டு (ஸர். கே. வி. ரெட்டி நாயுடு)	3
ரஷியாவில் கல்வி அபிவிருத்தி (ச. மு. பிள்ளை)	23
சுகாதாரம் (எஸ். கே. பி. முத்துராஜா.)	29
மழை பெய்யவைக்கும் மெஷின்	35
காதல் உற்பவம் (ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)	36
இந்தி ஆசிரிப்பு? (சிறு கதை)	43
பஞ்சோபாக்கியங்கள்	49
மொழி ஆராய்ச்சி (ஸோரம்ஜி காராபூர் வாலா எம். ஏ. பி. எல். டி.)	55
பண்டைத் தமிழர்	5.
டீனேஷியர்களுக்குக் காணப்படும்	61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 4. } ஈரோடு 1938 ஆகஸ்டு 1. { இதழ் 4.

சுதந்திர கீதம்.

(க. ராஜகோபால் கோலாலம்பூர்)

"சிவபெருமான் கிருபை வேண்டும்" என்ற மெட்டு.

பல்லவி.

சுயமரியாதை வேண்டும் மக்கள்
சுதந்திரம் பெற வேண்டும்
வேறென்ன வேண்டும் (சுய)

அநு பல்லவி.

அடிமை வாழ்வு கினில்
ஆகன்றிட வேண்டும்
ஆரியாணமை யொழிய வேண்டும்
வேறென்ன வேண்டும் (சுய)

ஜாதிமத பேதங்கள்
ஜனசமூக மாற்றங்கள்
தலைத்திடா திருக்கவேண்டும்
வேறென்ன வேண்டும் (சுய)

தாழ்வுயர் வென்றெண்ணாமல்
தன்னலம் மேற்கொள்ளாமல்
சரிநிகர் பேறவேண்டும்
வேறென்ன வேண்டும் (சுய)

வறுமைப்பிணி யகற்றி
வளருந் தீமைகள்மாற்றி
மனமகி ழுற வேண்டும்
வேறென்ன வேண்டும் (சுய)

சரணம்

ஆறிவைப் பெருக்குங்கல்வி
அறமளித் திட வேண்டும்
அறிவில்லா மூட மதி
இனை யொழித் திடவேண்டும்

ஆகில இந்திய மக்கள்
அனைவரும் ஒருமிக்க
அன்புடன் வாழவேண்டும்
வேறென்ன வேண்டும் (சுய)

அநாகரிக காலத்தில் வாழ்ந்த அரசர்களும், குருமாரும் அநாகரிககாலத்தில் வழக்கில் இருந்துவந்த பொருள்களையே பாராட்டி யிருப்பார்கள். அத்தகைய பொருள்களே சுவர்க்கத்தில் இருப்பதாகவும் கூறி யிருப்பார்கள்.

* * *

மத பயம், மத துவேஷம் முதலிய உணர்ச்சிகளை ஒரே அடியாய் தலை முழுகி விடுங்கள். நான் சுதந்தரமுள்ள ஆண் அல்லது பெண் என்ற உணர்ச்சியுடன் வாழ்க்கை நடத்துங்கள்.

இங்கர்சால்

இந்திப்புரட்டு

ஸர். கே. வி. ரெட்டி நாயுடு விளக்கம்.

சென்னை முதன் மந்திரியாரின் இந்தி கட்டாயபாடத்தைக் கண்டித்து ஸர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் எழுதுவதாவது:-

காங்காஸ்காரர் பதவியேற்று ஒரு மாதம் முடியுமுன்னே சென்னை மாகாணப்பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கப்போவதாக முதன் மந்திரியார் தெரிவித்தார்.

உடனே அதைப் பலர் கண்டிக்கத் தொடங்கினார்கள்.

ஆகவே 1937 ஏப்ரல் 13-ந்தேதி சென்னை மாகாணக் கல்வி ஐக்கிய சங்க ஆதரவில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் கட்டாய இந்தியை ஆதரித்து கனம் ஆச்சாரியார் பேசும்படி நேர்ந்தது.

அப்பால் 1937 ஆகஸ்டு 15-ந்தேதி முத்தியாலு பேட்டை ஹைஸ்கூல் ஆந்திர பாஷாபிவிர்த்தி சங்கச்சார்பில் கூடிய ஒருகூட்டத்தில் நான் கனம் ஆச்சாரியாரின் இந்தி கட்டாயபாடத்தை எதிர்த்துப் பேசினேன்.

மற்றும் பல பிரபலஸ்தர்கள் கண்டிக்க முன் வந்தார்கள்.

அவர்களுள் மூக்கிபஸ்தர் தோழர் சோமசுந்தர பாரதியார். அவரும் ஒரு காங்காஸ்காரரே. அவர் கனம் முதன் மந்திரிக்கு பகிரங்கக் கடிதமும் எழுதினார்.

1937 ஆகஸ்டு மாத வாக்கில் திருச்சி, தஞ்சாவூர், சேலம் முதலிய இடங்களில் கூடிய பொதுக்கூட்டங்களிலும் இந்தி கட்டாயபாடத் திட்டம் கண்டிக்கப்பட்டது.

இந்தியைகட்டாய பாடமாக்கினால் முஸ்லிம்கள் காங்கரசிலி ருந்து விலகி விடுவார்கள் என சென்னை அஞ்சுமனே ஐ. ஹமீ சு பினி சங்கம் போன்ற பொதுஸ்தாபனங்களும் எச்சரிக்கை செய்தன.

மாகாணம் முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்த மந்திரிகளும் இந்தி எதிர்ப்பின் வன்மையை உணர்ந்து கொண்டார்கள்.

காங்கரஸ்காரர் எதிர்ப்பு.

தியாகராயர் இந்திப்பிரசாரசபைச் சதுக்கத்தில் கிருஷ்ணன் பண்டாலை இந்திப்பிரசாரகர் பயிற்சிப் பள்ளிக்கூடத்துக்கு அஸ் திவாரக்கல் நாட்டக்கூடிய கூட்டத்தில் காங்காஸ்காரே இந்தி கட் டாய பாடத்தைக் கண்டித்து முதன் மந்திரியாரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள்.

எதிர் அபிப்பிராங்யகளைகனம் முதன் மந்திரி அலக்ஷ்யம் செய்யவே 1938 பிப்ரவரியில் காஞ்சிவாத்தில் ஒரு இந்தி எதிர்ப் பாளர் மகாநாடு கூட்டப்பட்டது. அம்மகாநாட்டுக்கு நானே தலைமை வகித்தேன்.

அதைத்தொடர்ந்து அநேக இடங்களில் அநேக கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

எதிர்ப்பாளர் துணிவு.

எதிரிகள் அபிப்பிராயம் மீண்டும் கட்டுப்பாடாக அலக்ஷ்யம் செய்யப்படவே எதிர்ப்பாளர்கள் கறுப்புக்கொடி பிடிக்கவும் மறியல் கிடக்கவும் உண்ணா நோன்பிருக்கவும் துணிவு கொண் டார்கள்.

எதிர்ப்புத் தோன்றி வெகு காட்களுக்குப் பிறகு—இந்தி கட் டாய பாடத் திட்டம் அமலுக்கும் வந்த பிறகு—கனம் முதன் மந்திரியார் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கவும் மறுநாள் ஒரு சர்க்கார் அறிக்கை வெளியிடவும் கருணை கூர்ந்து முன் வந்தார்.

ஜூன் 9ந் தேதி வெளிவந்த பேட்டி வாலாறும் 10ந் தேதி வெளிவந்த சர்க்கார் அறிக்கையும் மிகவும் வேடிக்கையாக இருக்

கின்றன. எதிரிகள் ஆட்சேபணைகளுக்குத் திருப்தியளிக்கும் அம்சம் அவற்றுள் ஒன்று கூட இல்லை.

கட்டாய இந்திபாடத் திட்டத்துக்கு ஆதாவாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

கட்டாய இந்திக்குக் காரணங்கள்

1. இந்தியால் தமிழ் அழியுமா அழியாதா என்பது முக்கிய பிரச்சினையல்ல; ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காருக்கு மாகாணத்திலுள்ள சிறுவர்களுக்குதாராளக் கல்வியளிக்க அதிகாரமுண்டோ? இல்லையோ? என்பதே முக்கியமான பிரச்சினை என கனம் ஆச்சாரியார் கூறுகிறார்.

முதன் மந்திரியார் அபிப்பிராயப்படி இந்தியின்றி எந்தக் கல்வித்திட்டமும் தாராளப் போக்குடைய திட்டமாகாதாம்.

ஆகவே தாராளக் கல்வி என்பதற்கு கனம் முதன் மந்திரியார் என்ன பொருள் கொண்டிருக்கிறார் என்பதை அறிவது கஷ்டமாக இருக்கிறது.

தாராளக்கல்வி யென்பது இலக்கியக்கல்வியென்றே சாதாரணமாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஆல்டஸ் ஹக்ஸிலி என்ற கல்விநிபுணர் கூறுவதை கவனிப்போம்.

"தற்காலக் கல்வி இலக்கியக் கல்வி—தொழிற்கல்வி என இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் மனோ பாவத்தை விருத்திசெய்து அறிவை விசாலப்படுத்துவதே இலக்கியக் கல்வியின் முதல் நோக்கம்.

சரித்திரம், தர்க்கம், மனோதத்துவம், ஸாயனம், உயிர் நூல் முதலிய விஷயங்களில் எகதேச அறிவைக்கொடுத்து மக்களை உயர்தர வாழ்வுக்கு லாயக்காக்குவது இரண்டாவது நோக்கம்.

பிரதிதின வாழ்வுக்குரிய தொழில் அறிவை விருத்திசெய்து ஜீவனத்துக்கு வழி வகுப்பது தொழிற் கல்வியின் நோக்கம்.

தாராளக் கல்விக்கு இந்தி அவசியமா?

கல்வி நிபுணர் ஆல்டஸ் ஹக்ஸ்லியன் இந்த அபிப்பிராயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பார்த்தால் தாராளக்கல்விக்கு இந்தி அவசியமில்லை என்பது விளங்கிவிடும்.

முதன் மந்திரியார் அபிப்பிராயத்துக்கு ஆதாவளிக்கும் எந்தக் கல்வி நிபுணரையும் நான் இதுவரைப் பார்த்ததே இல்லை.

2. சர்க்கார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தாராளக் கல்விக்கு இந்தி இன்றியமையாதது எனக் குறிப்பிடப்படவுமில்லை.

இந்திய தேசிய வாழ்வில் நமது மாகாணத்துக்கு அதன் அந்தஸ்துக்குரிய கண்ணியமான ஸ்தானம் பெறுவதற்கு இந்தி இன்றியமையாதது என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையை வெளியிட்ட விளம்பர மந்திரியார் தாராளக் கல்விக்கு இந்தி அவசியமில்லை. யெனவே நினைத்திருக்கிறார்போல் தோற்றுகிறது.

எனவே இந்தியைக் கட்டாயபாடமாக்குவதின் நோக்கம் அரசியல் சம்பந்தமானதே.

அப்படிப் பார்த்தாலும் கனம் ஆச்சாரியார் திட்டப்படியுள்ள சொற்ப இந்திப்படிப்பினால் இந்திய தேசிய வாழ்வில் சென்னை மாகாணத்தின் அந்தஸ்துக்குரிய ஸ்தானத்தை சென்னை மாகாணம் எப்படிப் பெற்றுவிடுமென்பது விளங்கவில்லை.

இந்த மாகாணத்திலே ஆயிரக் கணக்கான முஸ்லிம் சிறுவர்கள் உருது படித்திருக்கிறார்கள்.

அவர்களது உருது அறிவு இந்தியத் தேசிய வாழ்வில் அவர்களுக்குரிய ஸ்தானத்தை அளித்திருக்கிறதா?

மூடுமந்திரம் ஏன்?

அது எப்படியானாலும் ஆகட்டும், இந்தி கட்டாயப் பாடத்துக்கு இதுவரை கூறப்பட்டுவந்த இரண்டு அரசியல் சார்பான காரணங்கள் சர்க்கார் அறிக்கையிலோ முதன் மந்திரியார் பேட்டிவாலாற்றிலோ விளக்கப்படவேயில்லை.

இந்திய ஐக்கியத்துக்கு ஒரு பொதுமொழி தேவையென்பதும் இந்திய பூரண சுயராஜ்யத்துக்கு ஒரு அகிலஇந்திய பொது

மொழி இன்றியமையாதது என்பதுமே இதுவரை கூறப்பட்டு வந்த இரண்டு அரசியல் காரணங்கள்.

இந்தி வேண்டாமென்பவர்கள் இந்த இரண்டு காரணங்களையும் வன்மையாக எதிர்த்திருக்கிறார்கள்.

கானடா, தென்னாப்பிரிக்கா, ஸ்விட்சர்லாந்து நிலைமைகளை முன்னிறுத்திப் பார்த்தால் தேச விடுலைக்கு ஒரு மொழி அவசியமில்லை யென்பதும் இந்திய நிலைமைக்கு ஒரு பொது மொழி சாத்தியமானதல்ல வென்பதும் தன்குவிளங்கும்.

இந்த இரண்டு காரணங்களையும் அறிக்கையில் சர்க்கார் விளக்கிக் கூறாமலிருக்கக் காரணமென்ன?

தேச விடுதலைக்கும் தேசிய ஒற்றுமைக்கும் ஒரு பொது மொழி அவசியமில்லையென காங்கரஸ் சர்க்கார் ஒப்புக்கொண்டு விட்டார்களா?

அப்படியானால் இந்தி எதிர்ப்பாளர் தமது கிளர்ச்சியின் வலிமையினால் காங்கரஸ்மந்திரிகளிடமிருந்து ஒரு சலுகை பெற்றுவிட்டார்கள் எனறே சொல்லவேண்டும்.

காங்கரஸ் மனோபாவம் என்ன?

எனினும் சர்க்கார் அறிக்கையில் 'தேசிய வாழ்வு' என்ற சொற்றொடர் அடங்கியிருப்பதினால் காங்கரஸ் மந்திரிகளின் மனோபாவம் இன்னதென உணர முடியாமலே இருக்கிறது.

இருந்தாலும் சில காங்கரஸ் மந்திரிகளும், பார்லிமெண்டரி காரியதரிசிகளும் ஒரு பொது மொழிபற்றியும், ஒரு தேசிய மொழி பற்றியும் ஓயாமல் புலம்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

3 மந்திரியின் பேட்டி வாலாற்றிலும் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையிலும் இந்தியாவில் அதிகமாகாணங்களில் பேசப்படும் பாஷை இந்துஸ்தானி எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இதற்கு ஆதாரமில்லையென பல முறை மறுக்கப் பட்டிருக்கிறது;மறுப்பு தப்பென இது வரை நிரூபிக்கப்படவு மில்லை.

கவிச் சக்கரவர்த்தி டாக்டர் ரவீந்திரநாத் தாகூரைப்போஷக ராகக் கொண்ட கல்கத்தா 'மாடர்ன் ரிவ்யூ' இலக்கிய சஞ்சிகை அக்கூற்று பொய்யானதென நிரூபித்து இருக்கிறார்கள்.

பகுத்தறிவு

'ராபி டஜார்' இலக்கிய சங்கம் பல பெரிய வங்கப்பணடிதர் களை மெம்பராகக் கொண்டது.

வங்காளிகள் அபிப்பிராயம்.

இந்தியைப் பற்றி 'ராபிபஜார்' இலக்கிய சங்கத்தில் சமீபத் தில் விவாதம்நடந்த போது ஆனந்த பஜார் பத்திராசிரியர்களில் ஒருவரான பிரபுல்லா சர்க்கார், வங்காளி 8 கோடி மக்களால் பேசப்படுகிறதென்றும் இந்தி 11 கோடி மக்களால் பேசப்படுவ தாய்க் கூறப்படுவதற்கு ஆதாரமில்லையென்றும் கூறினார்.

இலக்கண இலக்கியங்கள் இல்லாத அநேக விருத்தியடை யாத பாஷைகளையும் இந்தியுடன் சேர்த்து இந்தி பண்டர்கள் புளி செய்கிறார்களாம்.

இந்தச்சலுகை வங்காளிபாஷைக்கும் காட்டப்பட்டால் | வங் காளி பேசுவோர் இந்தி பேசுவோரைவிட அதிகமாகவே இருப் பார்கள்.

இந்தியாவின் மிருதியான பாகங்களில் இந்தி பேசுவோர் வசித்து வருவதாகக் கூறப்படுவது அப்பென்றும் ஆசாம், ஒரிஸா, பம்பாய், அஜ்மீர், மீர்வாரா, பலூசிஸ்தானம், சென்னை, பரோ டா, கொச்சி, ஹைதராபாத், வடமேற்கு எல்லைப்புறமாகாணம், பாஞ்சாலம், காஷ்மீரம், மைசூர், ராஜபுதனம், கூர்ஜரம், திருவி தாங்கூர் முதலிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இந்தி தாய் மொழியுமல்ல; உபமொழியுமல்ல எனவும்"விசித்தா" பத்திரிகை யின் ஆசிரியரான உபேந்திரநாத கங்கூலி தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் கூறியிருக்கிறார்.

ஆகவே இந்தியை தேசீயப் பொது மொழியாக்க இந்திய தேசிய காங்காசும் இந்தி பேசும் வகுப்பாரும் முயற்சி செய்வதை "ராபிபஜார்" சங்கத்தார் எதிர்ப்பதும் இந்தி எதிர்ப்புக்கு இந்தி யாவிலும் வெளி நாடுகளிலும் வசிக்கும் வங்காளி பேசும் ஹிந் துக்களும் முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் ஆதரவளிக்க வேண்டு மெனக் கேட்டுக்கொள்வதும் அச்சரியமானதல்ல.

ஆகவே இந்தியே அதிகப்படியான இந்தியர்களால் பேசப் படும்பாஷை என்பது ஆதாரமற்ற பேச்செனத் தெளிவாகிவிட் டது.

4 முதன் மந்திரி பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட் டியின்போது "தமிழ் முதலிய பாஷைகள் மட்டும் கற்பிக்கப்

படும் ஆரம்பப்பாடசாலைகளில் இந்தி சட்டாயபாட மாக்கப்பட மாட்டாது" எனக் கூறியிருக்கிறார்.

அதுபோலவே "ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் தாய்மொழி மட்டுமே கற்பிக்கப்பட்டு வருவதினால் ஹிந்துஸ்தானிபாடம் ஏற்படுத்தப்படமாட்டா தென்று சர்க்கார் அறிக்கையும் கூறுகி றது.

ஹிந்துஸ்தானி ஒன்று இரண்டு மூன்றாவது பாடங்களில் தான் கற்பிக்கப்படுமாம்.

ஆகவே கீழ்த்தரா—உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் விரும்ப பாடமாகக்கூட கற்பிக்கப்படமாட்டாதென விளங்குகிறது.

கீழ்த்தரா—உயர்தரப் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கற்பிக் கப்பட்டால்தான் மாணவர்கள் ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களி லும் சேர்ந்து படிக்கமுடியும்.

இப்பொழுது அநேக உயர்தர ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் கற்பிக்கப்படுகிறது.

அந்த வகுப்புகளில் படிக்கும் கிராம வாசிகளான மாணவர் கள் நகரங்களுக்குச்சென்று மூன்றாவது நான்காவது பாடங்களில் சேர்ந்து படித்து வருகிறார்கள்.

இங்கிலீஷ் இஷ்டபாடமும் இல்லையா?

தாய்மொழிமட்டும் கீழ்த்தர—உயர்தரப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டு வந்தால் ஆங்கிலம் கற்க அப்பள்ளிக்கூட மாணவர்களுக்கு வசதியில்லாமலாகிவிடும்.

ஆரம்பப்பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் கிராமங்களிலே யே இருந்துவருவதினால் கிராம மாணவர்கள் இங்கிலீஷ் கற்க முடியாமல் கஷ்டப்படுவார்கள்.

பிரிடடனுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தம் இருந்துவரும் வரை கண்ணியமான ஜீவனம் நடத்த ஆங்கிலப் படிப்பு இன்றி யமையாததாகவே இருந்துகொண்டிருக்கும்.

(5) எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படுமென்றும் தமிழில் நல்ல பாண்டித்தியம் இருக் கும் முறையில் போதனை அளிக்கப்படுமென்றும் அதற்கு அறி

குறியாக எஸ். எஸ். எல். சி. சட்டம் திருத்தப்படப் போவதாயும் பேட்டி வாலாறும் சர்க்கார் அறிக்கையும் கூறுகிறது.

இந்தச் சலுகைகளுக்காக மாகாண மக்கள் காங்கஸ் சர்க்காருக்கு நன்றிபாராட்ட வேண்டியதுதான். தமது கிளர்ச்சிமூலம் இந்தச் சலுகைகளை காங்கரஸ் சர்க்காரிடம் இருந்து பெற்ற இந்தி எதிர்ப்புக்காரர் இதற்காகப் பெருமை பாராட்டிக்கொள்ளவும் உரிமையுண்டு.

ஏனெனில் எதிர்ப்பாளர் கிளர்ச்சி செய்யும்முன் இந்தக் கல்வி சீர்திருத்தங்கள்பற்றி பிரஸ்தாபிக்கப்படவே இல்லை.

ஆனால் இந்தச் சலுகை இந்தி கட்டாயப் பாடத்தை அமலுக்குக் கொண்டுவருவதற்குள்ள சூழ்ச்சியே அன்றி வேறல்ல.

இந்தி அல்லது இந்துஸ்தானியை உருது அல்லது காகரி லிபி மூலம் கற்றுக்கொள்ளலாம் என்பது காங்கரஸ் சர்க்கார் அளித்திருக்கும் இரண்டாவது சலுகை.

இது முஸ்லிம்களைப் பிடிக்கும் தூண்டிலாகும்.

இந்த உபாயத்தினால் இந்தி கட்டாயப் பாடத்தை முஸ்லிம்கள் ஆதரிக்கும்படி செய்துவிடலாமென காங்கரஸ் சர்க்கார் மனப்பால் குடிக்கிறார்கள்.

முஸ்லிம்களை ஏய்க்க முடியாது.

அப்படியானால் காங்கரஸ் சர்க்கார் எமாந்து போவார்கள் என்பது நிச்சயம்.

எவரும் வேண்டாத இந்த இந்துஸ்தானி வகுப்புக்களுக்கு தமது குழந்தைகளையனுப்ப முஸ்லிம்கள் ஒரு பொழுதும் இணங்க மாட்டார்கள்.

ஆனால் இந்தி இந்தி எனக் கத்திக் கொண்டிருந்த காங்கரஸ்காரர் திடீரென இந்துஸ்தானி இந்துஸ்தானி எனக் கூச்சல் போடக் காரணமென்ன?

இந்தியைக் கட்டாய பாடமாக்கப் போவதாகவே காங்கரஸ் மந்திரிகள் பிரசாரம் செய்து வந்தார்கள்.

சென்ற பட்ஜெட் விவாதத்தின் போதுதான் முதன் மந்திரியார் இந்துஸ்தானி எனக்கூறியதை நான் முதன் முதலில் கேட்டேன்.

இது முஸ்லிம்களைப் பிடிப்பதற்கு வீசிய வலைதானே?

7. வகுப்பு மாற்றத்துக்கு கட்டாய இந்தி தடையாக இரா தென்றும் ஆனால் பாடத்திட்டத்தில் அது ஒரு முக்கிய பகு தியாக இருக்குமென்றும் சொல்லப்படுகிறது.

நடராஜய்யர் சவுக்கடி

இதைக் கண்டித்தே "இந்தியன் சோஷியல் ரிபார்மர்" பத் திரிகையின் ஆசிரியர் தோழர் கொ. நடராஜய்யர் முதன் மந்திரி யாருக்குச் சவுக்கடி கொடுத்திருக்கிறார்.

அம்மட்டோ! இம்மாதிரியான கட்டாய இந்தியின் நோக் கம் என்ன என்பதையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு பையனும் இந்தி வகுப்புக்குச் செல்ல வேண்டு மாம்! இந்தி பயில வேண்டுமாம்! பரீட்சையிலும் எழுத வேண்டு மாம்! ஆனால் இந்தி பாடத்தில் தோற்றாலும் அவன் மேல் வகுப்புக்கு அனுப்பப்படுவானாம்!

இதன் அர்த்தம் என்ன? இதில் வேதோ சூழ்ச்சியிருக்கிற தென சந்தேகம் கொள்வது தப்பா?

பொதுவாக ஒரு விஷயத்தில் தோல்வியடையும் மாணவனும் இப்பொழுது மேல் வகுப்புக்கு அனுப்பப்படுகிறான்.

ஒரு விஷயத்தில் தோல்வியடையும் மாணவன் இந்தியிலும் தோல்வியடைந்தால் இனி அவன் மேல் வகுப்புக்கு அனுப்பப்படு வானா?

"கீழ் வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்கு மாற்றும் விஷயம் இந்திப் பாண்டித்யத்தைப் பொறுத்ததாயிராது; இப்பொழுது இருந்து வருவதுபோல் தாய் மொழி உட்பட இதர விஷயங் களில் மாணவனுக்குள்ள பொதுவான பாண்டித்யத்தைப் கவனித் தே கீழ் வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கு மாணவர்கள் மாற் றப்படுவார்கள்" என சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

ஆனால் பாண்டித்தியம் என்றும் பொதுவான பாண்டித்தி யம் என்றும் கூறப்பட்டிருப்பதின் மர்மம் என்ன?

பாண்டித்தியம் என்பதில் பரீட்சையில் தேறுவதைவிட வேறு ஏதாவது அடங்கியிருக்கிறதா?

அப்படியானால் இந்துஸ்தானி பயில்வதற்குச் செலவான பணமும் சக்தியும் வீண்தானே!

இந்துஸ்தானி படிப்பதினால் வேறு பாடங்கள் படிக்கத் தடை ஏற்படாதா?

வாஸ்தவத்தில், கட்டாய இந்திக்கு இந்தி எதிர்ப்பாளர் கூறும் ஆட்சேபணைகளுக்கு முதன் மந்திரி யளித்த பேட்டியோ சர்க்கார் அறிக்கையோ சரியான சமாதானம் சொல்லவேயில்லை.

இந்தி எதிர்ப்பாளர் ஆட்சேபணை.

இந்தி எதிர்ப்பாளர் ஆட்சேபணைகள் பின்வருமாறு:—

1. மொழி நமது சிந்தனை, கலை, ஐதீகம் முதலியவைகளைப் பாதிக்கக்கூடியது; ஆகவே மொழியை நாம் பெரிதும் மதிக்கிறோம். அதை எவராலும் மறுக்க முடியாது.

கருத்தை உருப்படுத்துவது மொழியே என்பது மனோதத்துவ சாஸ்திரிகளால் சர்வ சம்மதமாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

இங்கிலீஷ் படிப்பதினால் நமது கருத்தும் கலையும் ஐதீகங்களும் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்றன; மேலும் இந்தி படிக்க வேண்டியதாக நேர்ந்தால் நமது கருத்து, கலை, ஐதீகங்களுக்குப் பெரிதும் பாதகம் ஏற்படுமென்பது நிச்சயம்.

இங்கிலீஷ் பயிற்சியிலாவது சில நன்மைகள் இருக்கின்றன.

இங்கிலீஷ் சர்வ தேசச்செலாவணியுடைய ஒரு பாஷை. பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் இங்கிலீஷ் பயிற்சி இந்தியர்களுக்கு அதிக நன்மையளிக்கக் கூடியதாகவேயிருக்கும்.

மேலும் இங்கிலீஷில் உயர்வான இலக்கியங்களும் கலைகளும் உள்ளன.

ஹிந்துஸ்தானிக்கு இத்தகப் பெருமைகள் எதுவுமே இல்லை.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்துவரும் வரை வயிற்றுப்பிழைப்புக்கு இங்கிலீஷ் இன்றியமையாததாகவே இருக்கும்.

2. இந்தியா முழுமைக்கும் ஒரு பொது மொழி தேவையுமில்லை; சாத்தியமுமில்லை; இந்தியால் ஒரு பயனும் ஏற்படா

தாகையினால் அது தேவையில்லை. இந்தியா போன்ற ஒரு பெரிய தேசத்தில் பொது மொழி சாத்தியமுமல்ல வலுக்கட்டாயமாக ஒரு மொழியைப் பொது மொழியாக்கினாலும் அது நெடுநாள் அமலில் இருக்கப் போவதுமில்லை.

ஒரே மாகாணத்தில் வெகுகாலம் உன்னத நிலைமையிலிருந்த உயரிய மொழிகளும்கூட காலக்கிரமத்தில் சிதைந்து உருமாறி அதே மாகாணத்திலுள்ள ஜில்லா மக்களுக்கும் புரியாத மொழிகளாகி விடுகின்றன.

ஐரோப்பாவிலுள்ள மைனாரிட்டி சமூகங்களுக்கும் சர்வதேச சங்கத்துக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்களைப் பார்த்தால் மைனாரிட்டி சமூகங்களின் பாஷைகளுக்குப் பெயர் பெற்ற ஐரோப்பிய ராஜ்ய தந்திரிகளான சர்வதேச சங்க மெம்பர்கள் சிறுபான்மையோரின் தாய்மொழிகளுக்கு எவ்வளவு மதிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பது விளங்கும்.

இந்த ஒப்பந்தங்களிலெல்லாம் மைனாரிட்டி சமூகங்களின் மொழிகளுக்குப் பாதுகாப்பளிக்கப் பட்டிருக்கிறது.

பின்லாந்து தேசத்துக்கும் சர்வதேச சங்கத்துக்குக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தில் ஒரு விசேஷ அம்சம் இருந்துவருகிறது.

அதாவது பின்லாந்துக்குச் சொந்தமான ஆலந்து தீவில் அந்தத் தீவில் வாழும் மக்கள்—மிகவும் சொற்பப் போயிருப்பினும்—அவர்களது சம்மதியில்லாமல் பின்லாந்து மொழியைக் கட்டாயப் பாடமாக்கக் கூடாதென்று ஒரு வழுப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது.

காங்கரஸ் முடிவு செய்ய வில்லையே?

3. எந்த மாகாணக் கல்வித்திட்டத்திலும் இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று காங்கரஸ் முடிவு செய்பவுமில்லை.

தேர்தலில் தாம் மெஜாரிட்டி பெற்றால் இந்தியைக் கட்டாய பாடமாக்கப்போவதாய் தேர்தல் அறிக்கையிலோ தேர்தல் பிரசங்கங்களிலோ காங்கரஸ்காரர் குறிபபிடவுமில்லை.

இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று மாகாணமக்கள் எவரும் காங்கரஸ்காரரிடம் வேண்டிக் கொள்ளவுமில்லை.

அரசியல் சூதாட்டத்தில் நமது குழந்தைகளைப் பணயமாக வைக்கக் கூடாதென்பது எனது அபிப்பிராயம்.

இந்தி கட்டாய பாடத்தின் நோக்கம் அரசியல் சம்மந்தமானதேயின்றி கல்வி சம்பந்தமானதல்ல வென்பதற்கு "தேசியம்" என்னும் சொல் சர்க்கார் அறிக்கையில் இணைக்கப்பட்டிருப்பதே ஒரு சான்று.

இது ஒரு அரசியல் சூழ்ச்சியென்பதை மந்திரிகளோ பார்லிமெண்டரி காரியதரிசிகளோ மறைக்கவுமில்லை.

5. நமது மாணவர்களின் சற்கால பாடத்திட்டமோ மிகவும் பளுவானது.

அத்துடன் இந்தி கட்டாய பாடமும் சேர்க்கப்பட்டால் மாணவர்களுக்குப் போரபத்து உண்டாவது நிச்சயம்.

நமது பையன்கள் எல்லாம் பலசாலிகளல்ல; காட்டின் கால நிலை அவர்களது உடல் வளர்ச்சிக்கு உதவிபுரியக் கூடியதுமல்ல.

இந்தி பார்ப்பனருக்குத்தான் நன்மை.

6. இந்துஸ்தானிப்பயிற்சி ஒரு குறிப்பிட்ட சமூகத்தாருக்குத்தான் நன்மையாக இருக்கும்; எனையோருக்கு நன்மைதாவே செய்யாது.

இந்துஸ்தானி பாடத்தோல்வி, மேல்வகுப்பு மாற்றத்துக்குத் தடையாக இராதென்பது நமது ஆட்சேபணைகளுக்கு ஒரு சமாதானமாகவே இருக்காது.

7. இரண்டு நோக்கங்களுடன் முதன் மந்திரியார் இந்நிலை கட்டாய பாடமாக்கப் போவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

1. காங்கரஸ் தொண்டர்களாயிருந்தவர்களும் இந்திப் பிரசார சபையாரால் பயிற்சிபளிக்கப்பட்டவர்களுமான ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த வாலிபர்களுக்கு இந்தி ஆசிரியர் பதவியளித்து அவர்களது வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க முயல்வதாகக் கூறப்படுவது முதல் குற்றச்சாட்டு.

2. மற்ற காங்கரஸ் தலைவர்கள் மற்ற மாகாணங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கப் பயந்துகொண்டிருந்தாலும் தாம் மந்திரியானால் சென்னை மாகாணத்தில் இந்தியைக் கட்டாயபாடமாக்கிவிடுவதாய் வடநாட்டு நண்பர்களிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிவைக்க இந்தியைக் கட்டாய பாடமாக்கப்போவதாய்க் கூறப்படுவது இரண்டாவது குற்றச்சாட்டு.

ஆகவே தாராளக் கல்விக்காக இந்தி கட்டாயபாடமாக்கப்படவில்லை யென்பதும் காங்கரஸ் தலைவர் பாபு சுபாஷ் சந்திர

போஸ் தமது மாகாணத்தில் அமலில் கொண்டுவர விரும்பாத ஒரு திட்டத்தை தாம் தமது மாகாணத்தில் அமலில் கொண்டு வந்து விட்டதாய்ப்பீத்திக் கொள்வதற்காகவே, இந்தி கட்டாயப் பாடமாகப்படுகிறது என்பதும் வெளிப்படை.

இந்தி கட்டாயபாடமானால்.

8. இந்தி கட்டாய பாடத்தினால் வகுப்பு சச்சாவுகளும் சாதிப் பூசல்களுமே உண்டாகும்.

பார்ப்பனரல்லாதாரை ஒடுக்கும் பொருட்டு இந்தியைப்புகுத்துவதாக பகிரங்கமாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இது ஒருகால் புனைக்துரையாக இருக்கலாம்.

ஆனால் தற்கால மந்திரி சபையார் இதுவரைச் செய்துவந்துள்ள காரியங்கள் அத்தகைய அச்சத்துக்குக் காரணங்களாக இருக்கின்றன.

இந்தி கட்டாயபாடத் திட்டத்தினால் அந்த அச்சம் அதிகமாகி வகுப்புப்பூசல்களும் பிளவுகளும் உண்டாவது நிச்சயம்.

ஆரியல் பார்ப்பனர் தாம் ஆரியர் என்பதையும் ஆரியல் பார்ப்பனரல்லாதார் தாம் திராவிடர் என்பதையும் ஒரு பொழுதும் மறப்பதில்லை.

9. ஆங்கில ஆட்சி ஒழிந்து விட்டால் தென்னாட்டார் மீது ஆதிக்கம் செலுத்த வட நாட்டார் துடிதுடித்துக்கொண்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம்.

வட நாட்டாரின் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இந்தி கட்டாயப் பாடம் ஒரு பூர்வாங்க வேலையே

மூதன் மந்திரியார் கனவு.

இந்திக் கட்டாயப் பாடத்திட்டத்தைக்கைவிடும்படி எதிர்ப்பாளர் காங்கரஸ் சர்க்காரைப் பயமுறுத்தி வருவதாக மூதன் மந்திரியார் கனவு காண்கிறார்.

இந்தி எதிர்ப்பாளர் பல கண்டனக் கூட்டங்கள் கூட்டியிருப்பதும் மகாநாடுகள் ஊர்வலங்கள் நடத்தியிருப்பதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் செய்திருப்பதும் கறுப்புக்கொடிகள் பிடித்திருப்பதும் மறியல் செய்து வருவதும் மற்றும் பல வழிகளில் இந்தி கட்டாய பாடத்தில் தமக்குள்ள வெறுப்பைக்காட்டியிருப்பதும் மெய்யே.

அவர்களில் சிலர் உண்ணாவிரதமிருக்கிறார்கள்.

ஆனால் உண்ணாவிரதமிருக்க முன் வந்தவர்கள் காங்ரஸ் கோஷ்டியில் சேர்ந்தவர்கள் எனபதை காம் உணர வேண்டும்.

அவர்கள் போக்கு வருந்தத் தக்கதாயினும் சோர்மையான தாகும். எல்லாத் தொல்லைகளுக்கும் உண்ணாவிரதமே எற்ற பரிகாரம் என அவர்களுக்குக் காங்காஸ்கார் கற்றுக் கொடுத்த பாடமே அவர்களது உண்ணா விரதத்துக்குக் காரணம்.

மற்றவிதமான எதிர்ப்பு முறைகள் எல்லாம் சட்ட பூர்வமான வைகளே.

பூச்சாண்டி காட்டுவது காங்கரஸ் சர்க்காரே.

வாஸ்தவத்தில் இந்தி எதிர்ப்பாளரைப் பூச்சாண்டி காட்டு வது காங்காஸ் சர்க்காரே.

காங்காஸ்கார் பதவியேற்குமுன் கையாண்ட முறைகளைப் பின்பற்றும் இந்தி எதிர்ப்பாளருக்குப் போலீசார் தடியடி வழங் கும்படி தூண்டுவதும், கண்ணிபமானவர்களைக் கைது செய்வ தும், காரியாலயங்களில் சோதனை போடுவதும் காங்காஸ்கா ர் வெறுத்த—கண்டித்த கிரிமினல் திருத்தச் சட்டத்தின்படி வழக்குத் தொடருவதும் மற்றும் கொடிய அடக்கு முறைகளைக் கையாளுவதும் காங்காஸ் சர்க்காரேயாகும்.

வாஸ்தவத்தில் பயமுறுத்துவது காங்காஸ் சர்க்காரே யன்றி இந்தி எதிர்ப்பாளரல்ல.

வாப்போகும் சுயாராஜ்யத்துக்கு இதுதான் முற்குறியா? காங் காஸ் மந்திரிகள் 100-க்கு 3 மாகாண சுயாராஜ்பத்தின் லக்ஷணம் இதுவானால் படையும் விமானங்களும் உடைய, வாப்போகும் 100க்கு 100 பூரண சுயாராஜ்யம் எவ்வளவு லக்ஷணமாயிருக்கும் என வெகு சுலுவாக ஊகித்து அறிந்து கொள்ளலாம்!

பழைய சாத்தான் சர்க்காரிலே அடக்குறைகளும், பயமுறு த்தலும் கொடுங்கோன்மையும் தாண்டவமாடியதாகக் குறை கூறப்பட்டது. இப்பொழுது காற்று மாறியடிக்கத் தொடங்கி யிருக்கிறது.

ஊரைக் கொள்ளையடித்துப்போலீசார்கையில் அகப்படா மல் தப்பித்துக்கொண்டு பெரும் பணம்தேடி குபோனான ஒரு வன் அநியாயமாகத் தான் ஈட்டிய பொருளைப் பாதுகாக்க அதிகப்படியான போலீஸ் வேண்டுமெனக் கேட்பதுபோல்,

சுற்காலை காங்காஸ் சர்க்கார் போலீஸார் உதவியை நாடி தாம் முன்னர் கண்டித்த முறைகளைப்போலீசார் இந்தி எதிர்ப்பாளர் விஷயத்தில் கையாளவேண்டுமென்று தூண்டி பயமுறுத்தி வருகிறார்கள்.

கோரம்பு மறியல் குற்றமில்லையா?

கொஞ்சகாலத்துமுன்தான் காங்காஸ்காரர் கோரம்பு மறியல் செய்தார்கள்.

அவர்களில் ஒருவராவது தண்டனை செய்யப்படவில்லை.

மறியல் செய்தவர்களுக்கு போலீசார் பாதுகாப்பளித்ததாகவும் கூட ஒரு காங்காஸ் அபிமானமுடைய நாயிறு வெளியீடு பத்திரிகை பெருமை யடித்துக்கொண்டது.

இப்பொழுது மறியல் செய்ததாகவும் மறியல் செய்யத் தூண்டியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட ஸ்தாழர்கள் சி. டி, நாயகம், கே. எம். பாலசுப்பிரமணியம் உட்பட 100 பேர்களுக்கு மேல் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிறையிலிருந்தபோது மோர் வேண்டுமென்று கிளர்ச்சி செய்த காங்காஸ்காரர் கடந்தும் சர்க்கார் சிறையிலிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு ராகிக் களியும் கூழும், குளித்துவருகிறார்களாம். புகார் செய்தும் கவனிக்கப்படவில்லையாம்.

ஆகவே காங்காஸ் ராஜ்யத்திலே காங்காஸ்காருக்கு ஒரு நீதி, அல்லாதவர்களுக்கு ஒரு நீதி என்பது விளங்கவில்லையா?

இக் காரியங்களெல்லாம் பாசிஸ்டு போக்குடையவைதானே?

இந்தி எதிர்ப்பு இயக்கம் மனக்குறையுடைய சில விஷமிகள் சூழ்ச்சியெனக் கூறிப்போது ஜனங்களை ஏய்க்க கனம் ராஜகோபாலாச்சாரியார் முயல்கிறார்.

இந்தி எதிர்ப்பாளர் தியாகக்கணக்கானவர்களை "மனக் குறையுடைய சிலர்" என கனம் ஆச்சாரியார் அலக்ஷ்யமாகக் கூறுவது உண்மையில் மிக வேடிக்கையாகவே இருக்கிறது.

மாகாணம் முழுதும் நடைபெற்ற ஆயிரக்கணக்கான கன் னனக் கூட்டங்களில் பங்குகொண்ட மக்களின் மனக்கொதிப்பை யும் உணர்ச்சியையும் கனம் ஆச்சாரியார் மெய்யாகவே அறிய வில்லையா?

அவர் செல்லுமிடங்களில் எல்லாம் கறுப்புக்கொடிகளையும் இந்தி எதிர்ப்பு விளம்பரங்களையும் பார்க்க வில்லையா?

இந்தப் பெரிய இந்தி எதிர்ப்பு இயக்கம் சில மனக்குறைய டைவர்களின் வேலையென அலக்ஷ்யமாகக் கூறிவிட்டால் பொது ஜனங்களும் அதை நம்பிவிடுவார்கள் என கனம் ஆச்சாரி யார் மெய்யாகவே நம்புகிறாரா?

வெளி மாகாணத்திலும் இந்திக்கு எதிர்ப்பு.

வெளி மாகாணங்களில் ஜனாப் ஜின்னா, இந்தியன் சோஷி யல் ரிபார்மர் ஆசிரியர் தோழர் கே. நடராஜப்பிள்ளை, கல்கத்தா ராபி பஜார் சங்கத்தார் முதலியோர், இந்தியைக்கண்டித்திருப்பதைக் கனம் ஆச்சாரியார் அறியவில்லையா?

இவர்கள் எல்லாம் மனக் குறைபுடையவர்களா?

ஸர். எம். கிருஷ்ணன் நாயர், மாஜி மந்திரி எஸ். முத்தைய முதலியார் ஸி. ஐ. இ., சாமி வேதாசலம், தூத்துச் சிவானந்த அடிகள், ஷண்முகானந்த சுவாமி முதலியோர் கண்டனத்துக்கு கனம் ஆச்சாரியார் என்ன பதிலளிக்கிறார்?

தோழர் சோமசுந்தர பாரதியாரும் மனக்குறையுடையவரா? அவர் இன்றும் ஒரு காங்கரஸ் வாதியாகத்தானே இருக் கிறார்?

சென்ற பொதுத்தேர்தலில் அவர் காங்கரஸ்காரரை ஆதரிக்க வில்லையா? காங்கரஸ்காரருக்காகப் பிரசாரம் செய்யவில்லையா?

இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் பேசுவோரில் பெரும்பா லார் காங்கரஸ்வாதிகள் தானே?

இந்தி எதிர்ப்புக் கண்டனத்தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றிய சங்கங்களின் மெம்பர்கள் எல்லாம் மனக்குறை யுடையவர்களா?

இவர்களும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் எல்லாரும் மனக்குறையுடையவர்களா?

எதிரிகள் மீது வசை புராணம் பாடுவதினால் அவரது நோக்கம் நிறைவேறிவிடும் என கனம் முதன் மந்திரியார் நம்புகிறாரா?

"கொடுஞ்சொல் கோழைத்தனத்தின் அறிகுறி" என்னும் பழமொழியைக் கனம் ஆச்சாரியார் அறியாரா?

வசை மொழிகளாலும் மழுப்பல்களினாலும் பொது ஜனங்களை ஏமாற்ற முடியாதென அவர் உணரவில்லையா?

மராமத்து மந்திரியார் பிதற்றல்.

ஒரு ஆந்திரான தான் தமிழர் இயக்கத்தை ஆதரிப்பது அக்கிரமமானதென கனம் யாக்கூப் ஹாஸன் ஒரு பொதுக் கூட்டத்திலே கூறினாராம்.

அவருடைய அறியாமைக்கு நான் மிகவும் இரங்குகிறேன்.

தமிழுக்கும் தெலுங்குக்குமுள்ள சம்பந்தத்தைக் கூட அவர் சரியாக அறியவில்லை யென்றே தோற்றுகிறது.

தெலுங்கு திராவிட பாஷைகளில் ஒன்று என்பதையும் சென்னை சர்க்கார் இந்தி கட்டாய பாடத்திட்டம் ஆந்திர நாட்டையும் பாதிக்கும் என்பதையும் அவர் அறியார்போல் தோற்றுகிறது.

அவருக்குத் தெலுங்கும் தெரியாது, தெலுங்குப்பத்திரிகைகளை அவர் படிப்பதுமில்லை. எனவே அவரை நான் மன்னித்து விட தயார்.

ஆனால் ஆந்திர நாட்டிலும் இந்தி கட்டாய பாடத்துக்கு எதிர்ப்பு இல்லாமலில்லை என்பதை அவர் அறிந்திருப்பாராக!

ஆந்திர தேசத்தம் பொன்மொழிகள்.

16 வருஷங்களுக்கு முன்—சட்ட மறுப்புப் போர் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே—"இங்கிலீஷ் ஸ்தா

னத்தில் இந்தி புகுத்தப்பட்டால் தென்னாட்டாராகிய நமக்குத் தான் அதிக கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும். நமது மொழியே நமது உயிர் நாடியானதினால் இந்தி மொழியினால் மேலும் பல நூற்றாண்டுகாலம் நாம் இந்திமொழிக்கு அடிமைப்படவேண்டியதாகவேசேரும். ஒரு அந்நியமொழி மூலம் நமது மனோஉணர்ச்சிகளைச் சரியாகத் தெரிவிக்கவே முடியாது. எனவே முன்னேற்றத்துக்குத்தடையேற்படுவது நிச்சயம் என ஆந்திர பத்ர கோபாலகிருஷ்ணய்யா எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அவர் அகில இந்திய காங்கரஸ் கமிட்டியில் காரியதரிசியாயிருந்தவர் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

ஆனால் கனம் யாக்கூப் ஹாஸன் சமீபத்தில் காங்காசில் சேர்ந்தவாஸகயினால் இந்த விஷயங்களெல்லாம் அறிந்திருக்க மாட்டார்.

ஆந்திர பார்லிமெண்டு தலைவரான தோழர் பி. கேசவராவ் பி. எஸ். ஸி., பி. எல். சமீபத்தில்வெளியிட்ட ஒரு தண்டுப்பிரசுரத்தில் இந்தி கட்டாய பாடத்தினால் ஆந்திரர்களுக்கு நேரக்கூடிய தீமைகளை விளக்கி எச்சரிக்கையும் செய்திருக்கிறார்.

இந்திப் பிரச்சினையை முன்னிட்டுப் பொதுஜனவாக்கெடுக்கும்படி மசூலிபட்டணம் தோழர் எம். வி. கிருஷ்ணாராவ் முதன் மந்திரியாருக்கு ஒரு சவாலும் விடுத்தார்.

இவ் வண்ணம் இந்தி கட்டாய பாடத்தைக் கண்டித்த கோபால கிருஷ்ணய்யா, கேசவராவ், எம். வி. கிருஷ்ணராவ், ஆகிய மூவரும் பிராமணரானதினால் அவர்களெல்லாம் மனக்குறையுடையவர்கள் என்றோ காங்கரஸ் எதிரிகள் என்றோ கூறிவிடமுடியாது.

தெலுங்குப் பத்திரிகைகள் எதிர்ப்பு.

சென்னை தெலுங்கு தினசரியான ஜனவாணியும், தெலுகு பத்திரிகையான ஸ்வதந்தாவும் ராஜமந்திரிபிலிருந்து வெளிவரும் "பிரபுத்தபாத்" பத்திரிகையும்இந்தி கட்டாயப் பாடத்தைக கட்டுப் பாடாக எதிர்த்தே வருகின்றன.

ஆந்திர நாட்டில் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களிலும் இந்தி கட்டாய பாடம் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

ஆனால் ஆந்திர ஆந்திர மாகாணப் பிரிவினை விஷயமாகக் கிளர்ச்சிசெய்து வருவதினால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் அவர்கள் இப்பொழுது அவ்வளவு கவனம் செலுத்தவில்லை.

அதனால் ஆந்திர நாட்டில் இந்திக்கு எதிர்ப்பில்லையென எற்பட்டுவிடாது.

கல்வி மந்திரி கூறியது என்ன?

"ஜனநாயக ஆட்சியில் சில சந்தர்ப்பங்களில் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாக நேரலாம். என்று நிருபர் சொன்னதைப்பற்றி, 1937 அக்டோபரில் தோயம்புத்தூர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கல்வி மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் "பொதுஜன அபிப்பிராயத்துக்கு மூணாக்க டக்க எந்த சர்க்காருக்கும் முடியாது. ஆகவே காங்கரஸ் சர்க்காரும் தமது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான்" என்று கூறியுள்ளார்.

அவர் அவ்வாறு கூறியது 8மாதங்களுக்குமுன். அது முதல் இந்தி எதிர்ப்பு படிப்படியாக வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை தாம் லக்ஷ்யம் செய்யவில்லை யென்றும் அதனால் தமிழுக்கு வாளமான நன்மையுண்டாயிருக் கிறதென்றும் தமிழை விருத்திசெய்யத் தாம் முயற்சி செய்து வருவதாயும் கனம் ஆச்சாரியார் ஓய்வொழிச்சல் இல்லாமல் கூறி வருகிறார்.

ஆனால் அவர்பேசிய பல கூட்டங்களில் தடியடிப் பிரயோ கமும் நடைபெற்றே இருக்கிறது.

எதிரிகளுக்கு ஆச்சாரியார் மதிப்பு.

கிரிமினல் திருத்தச் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டிரும் பது பற்றி நாம் எதுவும் கூறப் போவதில்லை.

இதுதான் கண்டனங்களை வாவேற்கும் முறையா? எதிரி களை மதிக்கும் முறையா? எனக் கேட்கிறேன்.

தமிழ்ச் சிறுவர்களிடம் தமக்கு அன்புண்டென்றும் கனம் ஆச்சாரியார் அடிக்கடி கூறிக்கொள்கிறார்.

ஆனால் அந்த அன்பைக் காட்டும் முறை இதுதானா?

கனம்முன்னிம் மந்திரி தெண்டுக்கல்லில் கூறியது போல் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நசுக்க முதன் மந்திரியார் முடிவுசெய்திருப்பது மெய்யா? இல்லையா?

எதிரிகளை நசுக்குவது தான் ஆரியர் வழக்கு—அவர்கள் ஜெர்மன் ஆரியராயிருந்தாலும் சரி, இந்திய ஆரியராயிருந்தாலும் சரி.

ஜெர்மானியிலே ஆரிய ஹிட்லர் யூதர்களை நசுக்கிவிட்டார்.

இந்தியாவிலே ஆரிய ஆச்சாரியார் தமிழரை நசுக்க முயற்சி செய்கிறார்.

பன்னூண்டு காலம் (பிராமணர் தமிழருடனும் ஜெர்மானியர் யூதர்களுடனும்) சேர்ந்து வாழ்ந்தும் ஆரியர் ஜாதி வெறியும் துவேஷமும் ஒழியவில்லையே!

இயற்கையின் அற்புதம்.

குதிக்கும் சுண்டெலி என்ற மிருகமொன்றிருக்கிறது. அது தூரத்திலிருந்து பார்த்தால் பறவை போலவே தோன்றுகிறது. இரு சுண்டெலியாயிருந்தாலும் இது பறக்கிறதென்றே கூறவேண்டும். இதன் நீளம் 3 அங்குலந்தான். இது கடப்பதில்லை. 10 அடி தூரம் ஒவ்வோர் தடவையும் குதித்துத் தாண்டிப்போய் தான் உட்காருகிறது. ஆனால் பறக்கும் இச்சுண்டெலிக்கு இறகுகள் கிடையாது. இது ஏன் மற்ற சுண்டெலிகளைப்போல் காலால் ஓடாமல் குதித்துச் செல்லுகின்றன வென்பதும் இயற்கையிலுள்ள மற்றோர் அற்புதம்.

ருஷியாவில் கல்வி அபிவிருத்தி.

(கல்வி ஆசிரியர் ச. மு. பிள்ளை எழுதியது.)

சோவியத் ஆட்சி காடெங்கும் பரவி வருகிறது. அறியாமை என்ற பேயை காட்டைவிட்டுத் துரத்த சோவியத் கங்கணங்கட்டி யிருக்கிறது. ருஷியாவின் பொது பாஷை ருஷிய பாஷை எனினும், இன்னும் அறுபது வேறு பாஷைகள கற்பிக்கப் படுகின்றன. இந்தப் பாஷைகளில் பல இதுகாறும் எழுத்து வடிவின்றி இருந்தன. சோவியத் அரசாங்கம் இவற்றிற்கு உருக்கொடுத்து, இவற்றுள் புத்தகங்கள் எழுதி வெளியிட்டு, நாடெங்கும் கல்வியைப் பரப்பி வருகிறது. பள்ளிக்கூடங்களும், பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் காளுக்கு காள் மிகுந்து வருகின்றன. படிப்பும் சிறந்து வருகின்றது. புத்தப் புதிய முறைகள் அநுசரிக்கப்பட்டு வருகின்றன. தொழிற் கல்வியும், சாஸ்திரக் கல்வியும் அளிக்கப் படுகின்றன. ஏழை மக்களும், செல்வர்களும் ஒரே விதக் கல்வியைப் பெற்று வருகிறார்கள். மக்களுக்குள் பிறப்பினால் உயர்வு தாழ்வின்மை கல்விச் சாலைகள் எங்கும் அறிவுறுத்தப் படுகின்றது.

சோவியத் ருஷியாவின் ஜனத்தொகை 15 கோடியாகும். பள்ளிக்கூடங்களில் வாசித்துவரும் மாணவர் தொகை ஒரு கோடியே பதினைந்து லட்சம். பள்ளிக்குச் செல்லும் வயதுடையவர்களுள் 100-க்கு 70-பேர் கல்விகற்று வருகிறார்கள என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. $24\frac{3}{4}$ கோடி ஜனத்தொகை உடைய பிரிட்டிஷ் இந்தியாவில் கீழ்த்தர மத்திய உயர்ந்த கலாசாலைகள் எல்லாவற்றிலும் படித்து வருபவர்கள் எண்ணிக்கை 111,57,496 மட்டுமே! சோவியத் ஆட்சியில் படிக்கும் ஆண் பிள்ளைகள் தொகை இரட்டித் திருக்கிறது. பெண்கள் தொகை மும்மடங்கு கதிகமாயிருக்கிறது. இதனினும் ருஷியாவின் கல்வி முன்னேற்றத்திற்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ?

கல்வி கற்பிக்க அநுசரிக்கப்படும் முறைகள் புதியன வாயும், பிற நாடுகளுக்கு வழிகாட்டிகளாயும் விளங்குகின்றன. பிள்ளைகளுக்கு எவ்வளவு இலகுவாகக் கல்வியைப் போதிக்க முடியுமோ அந்த வழிகளே அநுசரிக்கப் படுகின்றன. முதலில் எழுத்துக்களையும் வாய்ப்பாடுகளையும் மனனஞ் செய்யும்படி இளஞ் சிறுவர்களையும் சிறுமிகளையும் வற்புறுத்துவதில்லை. முதலில் சிறுசிறு வாக்கியங்களும் சொற்களும் சொல்லித்தரப் படுகின்றன. பின்னரே எழுத்தறிவும் எண்ணறிவும் தரப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் ஒரே விடத்தில்தான் கல்வி பயின்று வருகிறார்கள். ஆனால் பெண் "சரி நிகர்" என்னும் உணர்ச்சி ருஷிய நாட்டில் வேர் ஊன்றியிருக்கிறது. பரீட்சைத்திட்டங்களை ருஷியா நாட்டை விட்டுஅகல ஓட்டிவிட்டனர். பரீட்சைகளால் விளையும் தீமைகள் எண்ணிறந்தன. மாணவர்களுள் பலர் வளைந்த முதுகும், மங்கிய பார்வையும், வலியற்ற தோளும், ஒளியற்ற முகமும் கொண்டு திரியும் காட்சிக்குக் காரணம் பரீட்சைகளென்று அவைகளை ருஷியா சட்டங்களால் தடுத்திருக்கின்றன.

பள்ளிக்கூட நிர்வாகம் மாணவர்களுடைய கையில் இருக்கிறது. பிள்ளைகள் எது செய்ய வேண்டும் என்று விரும்பினாலும் உபாத்தியாயர் தடுக்கக்கூடாது. கட்டாயம் பள்ளிக்கூடம் வர வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் கிடையாது. பிள்ளைகளுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டியதும், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியதுமே உபாத்திமார்களின் தொழில். இம்முறை வெற்றி அளித்திருப்பது மாணவர்களுடைய நல்ல நடத்தைக் குச்சான்று பகர்கிறது. உபாத்திமார்களும் நன்கு படித்தவர்களாயும், ஆராய்ச்சி முன்னேற்றத்தை அறிந்தவர்களாயும் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மதக் கல்வி எங்கும் அளிக்கப்படுவதில்லை. சமூக உடைமைக்காரர்கள், மதம் மனிதர்களுடைய பகுத்தறிவைக்கெடுக்கும் ஒரு லாகிரி வஸ்து என்று கினைத்து வருகிறார்கள். மதம் மனிதர்களுக்கு அபினி போன்றதாகும் என்பது இவர்களுடைய கருத்து.

பள்ளிப்பிள்ளைகள் பல விடங்களுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். பல காட்சிகளையும் நேர்முகமாக அவர்கள் காட்டப்படுகிறார்கள். நகரத்தில்பிறந்துவளர்ந்தபிள்ளைகளை காட்டுப் புறங்களுக்கு அழைத்துச் சென்றும், காட்டுப்புறத்

துப் பிள்ளைகளை நகரங்களுக்கு இட்டுச்சென்றும், பரந்த நோக்கையும், சகோதர உணர்ச்சியையும் வளர்த்து வருகிறார்கள்.

கலாசாலை மாணவர்கள் ருஷிய காட்டில் ரயில்களில் சிட்டின்றிப் பிரயாணஞ் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாணவர்கள் பல விடங்களுக்கும் போய்ப் பிரசாரம் செய்து காட்டின் கல்வியபிவிருத்தியை வளர்க்கிறார்கள்.

வயது சென்றவர்களுக்குக் கல்வியைப் போதிக்கப் பல வழிகள் ஆளப்பட்டிருக்கின்றன. திரையரங்குப் படக் காட்சிகளும், மியூசியங்களும், சொற்பொழிவுகளும் முக்கிய மானவை.

பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படும் கல்வியை மூன்று பிரிவாக வகுத்திருக்கின்றனர். இயற்கை, வேலை, மனிதர் கடவுடிக்கைகள், இயற்கைப் பிரிவில் உலகத்தின் தன்மை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும். "உங்கள் ஊரில் என்ன தொழில் செய்து ஜனங்கள் வசித்து வருகிறார்கள்? என்ன பயிரிடுகிறார்கள்? என்ன மிருகங்களை உபயோகப் படுத்துகிறார்கள்?" என்ற இதுபோன்ற கேள்விகளும் அவற்றிற்கு விடைகளும் அநுபவ பூர்வமாக மாணவர்களுக்குக் காட்டப்படுகின்றன. இரண்டாவது பிரிவில் பிள்ளைகள் வேலை செய்யும் இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். பண்ணைகளிலும், தொழில் ஆலைகளிலும் வேலைகள் செய்து வருவதை பிள்ளைகள் அறிந்து அவ்வாறு தாங்களும் செய்யக் கற்றுக் கொள்கிறார்கள். மூன்றாம் பிரிவில் மக்கள் கடமை அரசியல், குடும்பம், நாடு முதலிய பல பொருள்களைப் பற்றிய அறிவு கொடுக்கப் படுகிறது. பிள்ளைகள் போட்டா போட்டியின்றிப் பொது விஷயங்களில் ஒத்து வேலை செய்யக் கற்பிக்கப் படுகின்றனர். சமூக உடமைக் கொள்கைகள் பெரும்பாலும் கற்பிக்கப்படுகின்றன.

ருஷியாவின் கல்வி முறைகளை ஒரு சிலர் புகழ்ந்தும், ஒரு சிலர் இகழ்ந்தும் பேசியிருக்கின்றனர். மதக் கல்வியை அறவே ஒழித்தாலும், பெண்களையும் ஆண்களையும் ஒரே பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதாலும் ஒழுக்கக் குறைவிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது, சமூக உடமைகொள்கை ருஷியா மக்களை அடிமைப்படுத்த வந்துள்ளதென்றும் குற்றம்சாட்டப்படு

கிறது. இக்கூற்றுகளிலும் உண்மை யில்லாமல் இல்லை. ஆனால், எந்நாட்டுக் கல்விமுறைகளில் இழுக்குகள் இல்லை? இவற்றை உன்னுங்கால், ருஷியா மக்களின் முன்னேற்றம் கண்மைப் பிரமிக்கச்செய்கிறது. காம்முற்குறித்த முன்னேற்றம் பத்து வருஷங்களுக்குள் பிற நாடுகள் எதிர்த்து கின்ற காலத்தில் நிகழ்ந்தது என்பதை அறிந்தால் எவ்வளவு போற்றுதற்குரியது என்பது விளங்கும். சுதந்திரம் பெற்று முன்னேற்ற ஆசை மிகுந்துள்ள நாடுகளே இவ்வாறு முன்னேற முடியும் என்பது ஈண்டுக்குறிப்பிடத்தக்கது.

ருஷிய அரசியல் முறையும் கல்வி முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் பாராட்டுதற்குரியன. நாகரீகம் படைத்ததாகச் செருக்குடைய பல மேல் நாடுகளும் ருஷியாவின் கல்வி முன்னேற்றத்தைக் கண்டு படித்துக் கொள்ளலாம். இருபத்திரண்டு வருஷக் கல்வி அநுபவம் உடைய ஸ்காட் நீயரிங் என்னும் அமேரிக்க ஆசிரியர் ருஷியர் படிப்பு முன்னேற்றம் போல் வேறு எங்கும் கிடையாது எனக் கூறுகிறார். சோவியத் காட்டின் ஆர்வமும் ஊக்கமும் பிறரை ஊக்குதல் வேண்டும்.

சமூக உடைமையை நிறுவுவதில் ருஷியர் வேறு முறைகளை அநுசரித்திருந்தால் நலமாய் இருந்திருக்கும் என நாம் விரும்பலாம். ஆனால், ருஷியாவில் வேறு முறைகளை அநுசரிக்க வதுல்லிலாதிருந்ததை நோக்குங்கையில் ருஷியப் புரட்சி ஒரு பெரிய நன்மை என்றே கூற வேண்டும். கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து, பதினைந்து கோடி மக்களுக்குச் சுதந்திர மூச்சுக் கொடுத்த ஓர் இயக்கத்தைத் கடிவது எங்ஙனம்? ஒவ்வொரு தேச மக்களும் தங்களுக்கு எவ்வழி சிறந்ததோ அதையே அநுசரிக்க வேண்டுமன்றோ?

உலக ஸ்திரீ சமூகத்திற்கு ஓர் வேண்டுகோள்.

நாடு பிடிக்கும் ஆசையினால் தூண்டப்பட்ட சர்வாதிகார ராஜ்யங்களின் படையெடுப்பினாலும், அதனால் ஏற்படும் அழிவையும் கஷ்டத்தையும் நினைத்துக் கதிகலங்கி, எத்தனையோ தரம் அங்காடுகள் அவ்விதம் செய்வதற்குமுன், அவைகளின் செயல்களைக் குறித்து எச்சரிக்கை செய்திருக்கிறோம். இச்செயல்களைக் குறித்து நாமும் கடு நடுங்கிக் கொண்டேதானிருக்கிறோம். கடைசியாக இப்பொழுது எல்லாம் நம் தலையிலேயே வந்து விழுந்து விட்டன; உலக சரித்திரத்திலேயே இதுவரையில் இல்லாத அட்டூழியங்களும், காட்டுமிராண்டித் தனமான செய்கைகளும் உலகத்தின் பல பாகங்களிலும் கையாளப்பட்டு வருகின்றன. ஸ்பெயின் தேசத்திலும் சைனாவிலும் நடத்தப்படுவதும் இதுவே. பல்லாயிரக் கணக்கான ஸ்திரீகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். தாய்மார்கள், தம் குழந்தைகளையும், மனைவிமார் புருஷர்களையும் குழந்தைகளையும் பறிகொடுத்து நின்றனர். சர்வாதிகார ராணுவ அதிகாரிகள் ஆயிரக்கணக்கான குடும்பங்களிலிருந்து புருஷர்களையும், குழந்தைகளையும் வலுக்கட்டாயமாகத் தூக்கிக் கொண்டு போய் விடுகின்றனர். தாங்கள் செய்யப்போகும் கொலை பாதகத் தொழிலில் இவர்களையும் ஈடுபடச் செய்ய பயிற்சி யளிக்குன்றனர். ஆ, என்னகொடுமை! தமக்கு அடுத்தாற்போலுள்ள இராஜ்யங்கள் சுகேகத்தையும் சமாதானத்தையும் அடைய விரும்பும்போது இக் கொழுப்பெடுத்தவர்கள் இப்படியும் செய்வது நியாயமா? உலகமே இவர்களின் செயலைக் கண்டு கிடு கிடுவென்று ஆடுகின்றது. மண் ஆசை பிடித்த இவர்களால் காகரிகம் எல்லாம் பாழாய்ப்போகின்றது. சமாதானத்தையே விரும்பும் பொது மக்கள் கிலியுடன் வாழ நேரிடுகின்றது.

இப்படியாக மனித வர்க்கத்தினரின் ஆராயும் சக்தியும் காகரீகமும் சீரழிந்து கொண்டே வந்து ஒரேயடியாக கண்ணுக்குத் தெரியாமல் மறையும் நிலைமையிலிருக்கிறது. இவ்வித அட்டூழியங்களையும் துஷ்கிருத்தியங்களையும் செய்பவர்

கனைத் தடுக்கவே சர்வதேசத்திலுள்ள ஸ்திரீகளுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. என்றும் மறக்க முடியாத தமான உதவியளிக்க நாம் முன் வந்ததாக எல்லோர் மனதிலும் என்றும் ஞாபகமிருக்கும்.

இச்சர்வாதிகாரிகளாகிய பாசிஸ்டுகள், மனித வர்க்கத்தினரின் முன்னேற்றத்திற்கு மாறான விதங்களில், நியதியற்ற தன்மையில் நடந்து கொள்கின்றனர். உலகத்திலுள்ள ஸ்திரீகளின் நோக்கத்திற்கும் ஏழ்மை நிலையிலும், ஓர் வித சக்தியும் அற்று உள்ள பொது மக்களின் நோக்கத்திற்கும் சம்பந்தம் இருக்கின்றது. ஸ்திரீகளின் முன்னேற்றம் தற்சமயம் ஸ்பெயினிலும் சைனாவிலும் நடக்கும் யுத்தங்களினால் பாதிக்கப்படும் என்பதை நன்குதெரிந்து கொள்ளல் வேண்டும்.

தலைக் கிறுக்குப் பிடித்த சர்வாதிகாரிகள் ஜனங்களின் முன்னேற்றத்தைக் கவிழ்த்து விட முயல்கின்றனர். நாகரிகத்துக்குப்பதிலாக மிருகத் தன்மையைப் போதித்து "பழைய குருடி கதவைத் திறடி" என்ற பிரகாரம் உலக சரித்திரத்தில் மத்திய காலத்தில் கொடுமையாய் நடத்தப்பட்ட மாதிரியில் ஸ்திரீகளை நடத்த ஆசைப்படுகின்றனர் போலும். கிழக்குப் பக்கத்தில் கொள்ளைக் கூட்டத்தினராகிய ஜப்பானியரும், மேற்கு ஐரோப்பாவில் நித்தாவியபாசிஸ்டுகளும், ஜெர்ம்ன் பாசிஸ்டுகளும், தங்கள் நோக்கத்தையும் தாங்கள் செய்யும் வேலைகளின் விதத்தையும் ஸ்பஷ்டமாக நமக்குத் தெரிவித்து விட்டார்கள்.

மனித வர்க்கத்தின் விதிவசத்தை கட்டுப்படுத்தவோ அல்லது அடக்கி ஆளவோ இக்காண்டா மிருகங்களால் முடியவே முடியாதென்பதை நாம் கண் கூடாகக் காணப்போகின்றோம். இவ்விதம் ஓர் குறிப்பட்ட எல்லையில்தான் நடக்கின்றதென்று நினைக்காதீர்கள். நேற்று ஸ்பெயினில் சண்டை ஆரம்பித்தது! இன்று சைனாவில் ஆரம்பமாகிவிட்டது! சாவு என்னும் மழை யுத்தப் பேய் ரூபங்கொண்டு காளைக்கு நம் தலைமீல் வர்ஷிக்காது என்று நாம் நிச்சயமாகக் கூறலாமா? இவ்விடுக்கண்ணான சந்தர்ப்பத்தில் சைனாவிலும், ஸ்பெயினிலும் பெற்றோர்களை இழந்த குழந்தைகளையும், அதைக்காட்டிலும் பன் மடங்கு அதிகமான பதி இழந்த ஸ்திரீகளையும், குழந்தைகளை இழந்த ஸ்திரீகளையும் வாழ்க்கை குலைந்துபோன ஸ்திரீகளையும் காப்பாற்ற வேண்டுமென்று உங்களை வேண்டிக்கொள்

சுகாதாரம்.

(எஸ். கே. பி. முத்துராஜா தொட்டியம்)

1. தரையில் பாய் விரித்துப் படுத்தாலும் சரி, கட்டிலில் படுத்தாலும் சரி சுவற்றில் ஓட்டி இருக்கும்படி போட்டுப் படுக்காதே. அரை அடித் தள்ளிப்போட்டு கிடத்தினால் ஏனெனில் விஷ ஜெக்துக்கள் வந்தால் சுவற்றின் ஓரமாகத் தான் போகும்.

2. அதிக வியர்வையாய் இருக்கும் போது குளியாமல் வேர்வை தணிந்த பின் குளி.

கிறேன். அவர்களை ஆதரியுங்கள்; நீங்கள் உங்களை ஆதரித்துக் கொண்டவராவீர்கள். இப்பொழுதும் காலம் ஒன்றும் வீணாகக் கழிந்து விடவில்லை. போராசை பிடித்த காடுகளின் ஆக்ரமிப்பைத் தடுக்கவும், யுத்தத்தையே ஒருவாறு தடுத்து விடவும் கையில் ஆயுதங்களையேந்தி யுத்த சன்னத்தர்களாகிப் போரில் கலந்துகொள்ள வேண்டுமென்பதே முக்கியமில்லை. ஆக்ரமிக்கும் ராஜ்யங்களின் சாக்குகளைப் பகிஷ்கரியுங்கள். அவர்களுடன் ஒத்துழையாதீர்கள். நீங்கள் இவ்விதம் கடந்தால், அவர்கள் தங்கள் நோக்கங்களை மேல் நடத்த முடியாது போய்விடுவார்கள். நீங்கள் இந்த வழியில் உதவி செய்தால் நாங்களாகவே சத்துருக்களை ஜெயித்து விடுவோம்.

சமாதானத்தின் பொருட்டு இடும் சண்டையை ஆக்கிரமிப்புச் சண்டையிலிருந்து வேறாகப் பிரிக்க முடியுமா? படை எடுக்கப்பட்டுள்ள ஜனங்கள் ஒன்றாக நின்று மனித வர்க்கத்தின் உண்மை உவப்பை உணரவும், ஸ்திரீகளின் நோக்கத்தை விருத்தி செய்யவும் போராசைப் பிடித்த சர்வாதிகாரத்திருடனை—அரக்கர்களை எதிர்த்து நின்று சண்டை செய்து தோற்கடிக்க ஒரே எண்ணத்துடன் ஐக்கியமாக இருக்கட்டும்.

3. மனக்கவலை பலக்குறைவு.

4. பசி எடுத்தாலொழிய போஜனமுண்ணாதிரு.

5. வாரத்திற்கு ஒரு முறை சோப் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் முழுகு; எனெனில் எண்ணெய் அழுக்கெல்லாம் நீங்கும்.

6. திருமண காட்களின் அளவை கூடியவரை குறைத்துச் செய்தலே சுகாதாரத்திற்கும பொருளாதாரத்திற்கும் ஏற்ற முறையாகும்.

7. உடற்பயிற்சி செய்து உடம்பில் சூடுண்டாகி வியர்க்கும்போது காவராட்சியாயிருந்தால் குளிர்ந்த நீரை ஒரே சமயத்தில் வயிறு கொண்ட மட்டும் மடமடவென்று குடிப்பது கெடுதி. சிறிது நேரம் பொறுத்து கொஞ்சம் கொஞ்சமாக குடிக்க வேண்டும்.

8. ஒருவன் நோய் இல்லாமல் சௌக்கியமாக இருக்க வேண்டுமானால், அருந்துதல், பொருந்துதலில் அளவோடிருக்கவேண்டும்.

9. திகிலல்லது கோபமோடிருக்கும்போது பெண்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டல் கூடாது.

10. பக்குவமாகாத போஜனத்தினாலும், பழுக்காத அல்லது பழுத்து அழுகிப்போன கனிகளை உண்பதினாலும் "அஜீர்ண பேதி" உண்டாகுமென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

11. விஷபேதி பரவின காலங்களில் ஒவ்வொரு வீட்டிலும் காள்தோறும் புதிய வேப்பிலை வைத்தும் மஞ்சளை அரைத்து நீரில் கலக்கி வீடு பூராவும் தெளித்தல் வேண்டும். மீன், ஆட்டிறைச்சி, ஆட்டின் தலை முதலியவைகளை உபயோகிக்காதிருக்க வேண்டும்.

12. கண்டவிடங்களில் மலஜலம் கழிப்பதும், காலுக்குச் செருப்பின்றி போவதும் கூடாது. இவ்வாறிருந்தால் கொக்கிப்புழு நோயைத் தடுக்கலாமென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

13 சுண்ணாம்பைத் தண்ணீரில் போட்டுக் கலக்கவுடனே வீடுகளுக்கு அடித்தல் வேண்டும், முதல் காள் சுண்ணாம்பை நீரில் போட்டு மறுநாள் அடிப்பது பிரயோஜன

மில்லை. சுண்ணாம்பின் காரம் உள்ளபோதே அடித்தால் விஷப்பூச்சிகளும் அழுக்கும் அற்றுப் போகும்.

14. ஏதாவது அருந்தியபின்பே வெளியில் செல்ல வேண்டும், முக்கியமாக விஷபேதி முதலிய தொத்து நோய் பரவுங்காலங்களில் காலி வயிற்றோடு வீட்டை விட்டு வெளிச் செல்லவும் கூடாது. எனெனில் தொத்து நோய்களை உண் டாக்கும் கிருமிகள் காற்றில் பறந்து கொண்டிருந்து நாசியின் வழியாக உள் சென்றால் அதுசமயம் நமது தீனிப்பை காலி யாகவிருந்தால் நோய்கள் உண்டாவதற்கு ஏதுவாகும்.

15. நிழலின் அருமை வெயிலில் தெரியும்மென்பது போல், சுகம் கெடுகிற வரையில் சுகத்தின் அருமை ஒரு போதும் நமக்குத் தெரியாது.

16. மாதவிடாய் காளில் பெண்களுக்குப் பழைய சோறு போடுவதினால் கெடுதல் உண்டாகுமென்று வைத்தி யர்கள் கூறுகிறார்கள்.

17. கற்பவதியான சில பெண்கள் மண்கட்டி, சாம்பல், ஓடு முதலியவைகளைத்தின்கிறார்கள். இது சுகாதாரத்திற்கு முற்றிலும் விரோதம் இப்படிச் செய்யாதிருத்தல் நலம்.

18. இருட்டு வீடு எப்பொழுதும் அசௌக்கியமானது "வெளிச்சம் பிரவேசிக்கக்கூடாத இடத்தில் வைத்தியர் பிர வேசிக்கவேண்டும்" என்பது ஒரு பழமொழி.

19. ஈரவஸ்திரம் கட்டிக் கொண்டு உட்காரவாவது தூங்கவாவது வெளியில் போகவாவதுகூடாது. மாற்று உடை அது சமயம் கிடைக்காவிட்டால் ஈர வஸ்திரம் காயும்வரை உலாவிக் கொண்டிருத்தல் நலம்.

20. மூட்டு வஸ்திரத்தினாலே தலை முழுவதும் இருக்கமாய் மூடிக் கொண்டு தூங்குகிற கெட்ட பழக்கம் அநேகருக்குண்டு. இப்படிச் செய்யாதிருத்தல் நலம். எனெ னில் சுத்த ஆகாயம வரத்தடைப்படும்.

21. ஒருவருக்கு நோய் வந்தவுடன் நாகதோஷம், பேய், பிசாசு, பூதம், கொடியரசு, இருளன், காளி, மாரிமாடன், வீரன், காட்டேரி முதலிய தேவதைகளின் செய்கை என்றும் கில்லி, ஏவல், சூனியம், வைப்பு என்று சொல்லி மாந்திரீகம செய்யவேண்டுமெ, கோடாங்(குறி) கேட்கவேண்டும், (சாந்தி) செய்யவேண்டும் என்று இன்னும் பலவாராகச்

சொன்னால் அதற்குச் செவி சாய்க்காது தகுந்த வைத்தியரைக் கொண்டு மருந்து கொடுப்பது கலம்.

22. உடுத்தி இருக்கும் சேலையில் தீப்பிடித்துக் கொண்டால் தண்ணீரை இறைப்பதினாலும் கிடைக்காவிடத்துத் தரையில் படுத்துப் புரண்டாலும் அல்லது முரட்டுத்துப்பட்டி கோணி (சாக்கு ரெட்டு) யால் சுற்றிப் போற்றினாலும் தீ அணைந்துவிடும். தீ பற்றிடவுடன் அங்கு மிங்கும் ஓடக் கூடாது.

23. பசிக்காக சாப்பிடாமல் உருசிக்காகச் சாப்பிட்டு காவுக்கு அடிமையாகி உடல் சுகத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

24. விலை மடந்தையர் மயக்கில் விழுவார் வீழ்த்தெழுவதேது? வரிசை வரிசையாகவே வட்டியும் முதலுமாய் ரோகங்களை வரவும் தவறாது.

25. பெற்றோர்கள் திடகாத்திரத்துடன் அறிவுள்ளவர்களாய் இருந்தால்தான் அவர்கள் குழந்தைகளும் சந்தோஷமாயும், சுகமாகவும் வளரக் கூடும்.

26. கண்ட ஸ்நானம் (தலைக்கு ஜலம் விடாமல் உடல் மாத்திரம் நீரில் நனைத்துக் கழுத்தளவு குளித்தல்) கூடாது.

27. வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும் என்பது போல், வியாதி வருமுன் வியாதி அணுகாதபடி தடுத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமாகும்.

28. இராக்காலத்தில் மரங்களின் கீழே படுத்தலாகாது. ஏனெனில் இராக்காலத்தில் மரங்கள் சுத்தமான பிராணவாயுவை உட்கொண்டு, விஷவாயுவை வெளித் தள்ளுகின்றன. இதன் உண்மை தெரியாதவர்கள் பேய், அடித்து இறந்தான் என்று சொல்லுவர்.

29. இராக்காலத்தில் நித்திரை செய்யப்போகும் தருவாயில் விளக்குகளை (எண்ணெய் விளக்கு) கூடியவரை நிறுத்திவிடுதல் கலம். ஏனெனில் எரியும் விளக்குகள் பிராணவாயுவை உட்கொண்டு விஷ வாயுவை வெளியிடுகின்றன.

30. நித்திரை கொள்ளுமிடத்து ஒருவரோடொருவர் இராமுழுதும் சேர்ந்து படுத்தல் ஆகாது. ஏனெனில் ஒருவர் விடும் விஷக்காற்றை மற்றொருவர் சுவாசிக்கும்படி நேரிடும்.

31. நிலத்தில் படுப்பதைவிட கட்டிலின் மேல் படுப்பது நலம். ஏனெனில் விஷவாயு எப்பொழுதும் தரைமட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கும், பிராணவாயு எப்பொழுதும் தரை மட்டத்திற்குமேல் உலாவிக்கொண்டிருக்கும் ஆயினும் சுத்த மான வெளிக்காற்று வந்துலாவிக் கொண்டிருக்கும் இடங்க ளில் நிலத்தின்மேல் படுப்பது குற்றமாகாது.

32. காலை, மாலை இருவேளைகளிலும் தந்தசுத்தி செய்து வரவேண்டும். இரவு படுக்கைக்குப் போகுமுன் தந்த சுத்திசெய்தபின் தண்ணீரைத்தவிரமற்றதையும் உட்கொள்ள லாகாது. ஏதாவது உட்கொண்டால் உடனே தந்த சுத்தி செய்யவேண்டும்.

33. குழந்தை பிறந்தவுடன் சில சமயங்களில் முகம் வீங்கி கறுத்து விகாரப்பட்டிருக்கும். இதைச் சிலர் பேய், பிசாசு அடித்து விட்டதென்பது தப்பு. குழந்தையின் சிரசில் கட்டியிருக்கும் உதரப்பெருக்கே இதற்குக் காரணம். தொப் புள் கொடியை அறுக்கும்போது அதிலிருந்து ஓர் உள்ளங் கை இரத்தம் போகும்படி விட்டுப் பிறகு அதை இறுகக் கட்டி விட்டால் மிகக் குணமுண்டாகும்.

34. அம்மைப்பால் வைக்கும்போது சிலர் சுவாமிக்கு முடி வைத்திருக்கிறது, ஆகையால் கோறைப்படுத்தக்கூடாது என்றும், வழக்கமில்லை என்றும் சொல்லுகிறார்கள். சுவா மிக்கு முடிவைத்திருக்கும் குழந்தைகளுக்கு தேள் கொட்டு வதில்லையா? முள் தைக்கிறதில்லையா? தவறி விழுந்து காயமுண்டாவதில்லையா? வழக்கமில்லை என்று சொல்லு கிறவர்கள் எத்தனையோ புதிய வழக்கங்களை செய்து வரு கிறார்கள். அம்மை குத்திக்கொள்வது சாலச்சிறந்ததென்பது அநேக அறிஞரின் துணிபு.

35. பிரயாணத்தால் அநுபவமும், ஆரோக்கியமும் அறிவும் வளருமென்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

36. மோரை ஒருவன் எவ்வளவு அதிகமாக அடிக்கடி சாப்பிடுகிறானோ அதற்குத் தகுந்தபடி அவனுக்கு தேகா ரோக்கியமுண்டு.

37. சிலர் குழந்தைகளின் தலைமயிரைச் சாமிக்கு விட்டதாகச் சொல்லி சீவாமல் விட்டு விடுகிறார்கள். மயிரில் அழுக்கடைத்து பேன் உண்டாகி தினவெடுத்து பொடிபில் (ஒரு வகைப் புண்) சில சமயம் புழுக்களும் உண்டாவதுண்டு. பெற்றோர்களின் அறியாமையும் மூடப் பழக்கங்களுமே குழந்தைகளுக்கு ஆபத்தாய் முடிகிறது. ஆதலால் குழந்தைகளுக்கு காள்தோறும் தலைமயிரைச் சீவி முடிந்து விடவேண்டும்.

38. தொத்துநோய் பரவும் காலங்களில் தண்ணீரை கன்றாக கொதிக்கவைத்து ஆற்றிக் குடிக்க வேண்டும். பாத்திரங்களை உலையில் காச்சி சுத்தி செய்யவேண்டும். துணிகளை கொதிக்கிற நீரில் வேகவைக்கவேண்டும். மற்றவைகளை கன்றாய் வெயிலில் காயவைக்கவேண்டும். விடாமல் மழை பனி பெய்திடும் காலத்திலும் வெந்நீரே சாப்பிட வேண்டும்.

39. சிலர் அறியாமையினால் வேப்பிலை முதலியவைகளை அரைத்து அம்மை குத்திய விடத்தில் தடவி ஆற்றி விடுகிறார்கள். அப்படி ஆற்றுவதினால் அம்மை குத்திய பலன் அற்றுப் போகிறது. அப்படிச் செய்யாதிருப்பது நலம்.

40. விதி இருந்தால் தப்பாமல் சாவோம் என்று அநேகர் சொல்லுகிறதுவழக்கமாய் இருக்கிறது. இதுபுத்தியீனமே. கொள்கைப்படி விதி அதிக பலமுள்ளதானாலும் விதியை வெல்லும் மதி, என்பதற்கு அத்தாட்சி இருக்கிறது. விதிப்படி கடக்குமென்று பாம்புள்ள புற்றில் கையிடுதல் புத்தியீனமல்லவா?

41. பார்க்காமல் தண்ணீரைப் பருகாதே. படியாமல் எதிலும் கையொப்பமிடாதே.

42. இருட்டுக் காலங்களில் வெளியில் போகும்போது பாம்பிருக்குமென்ற இடங்களில் கூடியமட்டும் சத்தம் காட்டிப் போவது நலம். தடியினால் தரையைத் தட்டிப்போவது எல்லாவற்றிலும் கவனிக்கப்படத்தக்கது.

43. இந்த : இரண்டு புள்ளிகள் கடித்தவாயிலிருந்தால் அது விஷப் பாம்புக்கடியெனறும்; இரண்டு புள்ளிகளுக்கு மேற்பட்டு : : புள்ளிகளிருந்தால கடித்தது விஷப் பாம்பு மல்ல, விஷ ஜந்துவின் பற்களுமல்ல, வென்றும் காம உடனே அறுத்து கொள்ளலாமென்று மூர்துரை சொல்லுகிறார்.

44. மல ஜலமடக்காமலும், பழைய காய் கறிகளை புசியாமலும் இருத்தல் கலம்.

45. வெட்ட வெளியில் எத்தனைமுறைப் போகக்கூடுமோ அத்தனை முறையும் போவது நலம்.

46. சுகாதார முறைப்படி கடந்து வருவோமானால் அநேகமாய் நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம். மீறி வரும் நோய்களுக்குத் தக்க வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்வதே சிறந்த முறையாகும்.

47. வயிற்றில் எப்பொழுதும் அரைக்கால் பஙி இருந்து கொண்டேயிருந்தால் நோய் அணுகாது என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

மழைபெய்ய வைக்கும் மெஷின்.

ரூஷியர்கள் கண்டுபிடித்திருக்கும் முறை.

ஒரு மெஷீன் மூலம் 225 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சலாம்.

டிரான்ஸ்—வோல்கா (ரூஷியாப்) பகுதியில் வாட்சியால் காட்டில் ஏற்படும் பஞ்சத்தைத் தவிர்த்து விடவும், மழையே பெய்யாத பிரதேசங்களில் மழைபெய்யச் செய்யவும் ஒரு புதிய மெஷீன் ரூஷிய விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குய்பிஷெப் என்ற இடத்திற் கருகில் மிகுந்த சக்தியுடைய ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்டேஷன் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஸ்டேஷனிலிருக்கும் மெஷீன்களைக் கொண்டு வோல்காவில் தண்ணீர் இழுக்கப்பட்டு, நீளமான குழாய்கள் மூலம் எவ்வளவு தூரம் வரை வேண்டுமானாலும் தண்ணீரைக் கொண்டு சென்று மழைபோல் நீரைத் தெளிக்க முடியுமென்றும், அந்த மெஷீனை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாமென்றும், ஒரே சமயத்தில் 225 ஏக்கர் நிலத்திற்கு மழை பெய்யும்படி செய்யலாமென்றும் இந்த மெஷீனில் பம்ப்கள், பைப்புகள் முதலியன இருக்கின்றன வென்றும் தெரிகிறது. இந்தவீன மெஷீனைக் கண்டு பிடித்த விஞ்ஞானக் கழகத்தின் பெயர் அகில ஐக்கிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலயம் என்பதாகும்.

Genesis of Love.

காதல் உற்பவம்

(மு. சிங்காரவேலு, பி. ஏ. பி. ஏல்.,)

காதல் (Love) உற்பவத்தைப்பற்றி எழுதவேண்டிய அவசியத்தை ஈங்கு குறிப்பிடுவோம். சில சு. ம. தோழர்கள் கல்யாணம் என்றால் என்ன? ஆண் பெண் கூடி வாழ்வதன் காரணத்தைப்பற்றி விஞ்ஞானம என்ன தெரிவிக்கின்றது? கற்பின் வரலாறென்ன? ஆண் பெண் சம்பந்த விஷயத்தின் விசேஷமென்ன? இத்தியாதி விஷயங்களைப்பற்றி தெரிவிக்கும்படி கேட்டுவருகின்றார்கள். இதுவுமன்றி சிறிது காலத்துக்கு முன்பு "குடி அரசில்" உ. க. என்ற ஓர் கற்றறிந்த நிருபர் "குடி அரசு" பத்திராதிபர் எழுதிய "பெண் ஏன் அடிமையானாள்" என்ற நூலைப்பற்றிய மதிப்புரையை வாசித்ததின் பேரில் ஆண் பெண் சம்பந்த விஷயத்தைப்பற்றி எழுதவேண்டியது அவசியமென்று தோன்றியது. இத்தியாதி காரணங்களால் (Sexual Life) அதாவது ஆண் பெண் வாழ்க்கையைக்குறித்து எழுத கேரிட்டதை பத்திராதிபருக்கு அன்புடன் தெரிவித்துக்கொண்டு இந்த கட்டுரைக்கு இடங்கொடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

ஆண் பெண் வாழ்க்கையைக்குறித்து பல நூல்கள் ஆங்கிலத்திலும் மற்ற ஐரோப்பிய அமெரிக்க தேசங்களிலும் கடந்த 50 வருட காலமாக பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல்களில் சிலதே விஞ்ஞான முறையை அனுசரித்து எழுதப்படுகின்றன. இவைகளில் விசேஷப்பட்ட நூலொன்றுண்டு. அதாவது ("Psychology of Sex") என்று (Havelock Ellis) ஆறு வால்யம் கொண்ட நூலொன்றை எழுதியுள்ளார். இந்நூலாசிரியரே ("Man and Woman") என்ற ஓர் புத்தகத்தையும் எழுதியிருக்கின்றார். இவருடைய நூல்கள் மனிதனைப்பற்றியே எழுதியுள்ளது. ஆனால் ஆண் பெண் உற்பத்தியை (Evolutionary standpoint) பரிணாம சம்பந்தமாக எழுதியுள்ள நூல்கள் சிலவுள. (Haeckel) அவர்களால் (Evolution of Man) என்று எழுதப்பட்ட

நூலில் ஆண் பெண் வித்தியாச ஆரம்பத்தைப்பற்றி மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இதன் விஷயங்களை சுருக்கமாக தெரிந்து கொள்ள வேண்டுமானால் இரண்டு சிறு புத்தகங்களை வாசிக்கலாம். அவையாவன:— (Sex by Thomson and Geddes Home Library Rs. 1–6–0.) (Marriage by Westermarik Benns Library As. 0–6–0.)

ஆண் பெண் வித்தியாசப்பட்ட விதம்.

சிறு கிருமி உயிர்களில் ஆண் பெண் வித்தியாசம் கிடையா. ஒற்றைப்பை கிருமிகளில் (one Celled Life) ஆண் கிருமி என்றாகிலும், பெண் கிருமி என்றாகிலும், இல்லை. ஒற்றைப்பையின் பிரஜாவிருத்தி (Reproduction) எப்படியெனில் ஒரு பை இரண்டாகப் பிரிகிறது. இதை (Reproduction by fission) அதாவது இரண்டாகப்பிரிவதால் உண்டாகும் பிரஜாவிருத்தி என்பார்கள்.

இன்னுஞ்சில ஒற்றைப்பை கிருமிகள் இருக்கின்றன. அவைகளில் பிரஜாவிருத்தி உண்டாகவேண்டுமானால் அந்தக் கிருமியினுள்ளே முட்டைகள் சினைத்து வெளிப்படும். இதனை (Reproduction by budding) என்பார்கள். மூன்றாவதாக இந்தக்கிருமிகள் சிலகாலம் இவ்விதங்களால் பிரஜாவிருத்தி செய்துகொண்டபிறகு, இரண்டு கிருமிகள் ஒன்றாக கலக்கின்றன. இதனை (Conjugation) அதாவது சையோகம் அல்லது சேருதல் என்பார்கள். ஏன் இவ்விதம் இரண்டு கிருமி சேரவேண்டியதென்றால் பிரஜாவிருத்தியால் பலம் குறைந்து திரும்ப புது சக்தி பெற இவ்வித புணர்ச்சி அவைகளுக்கு அவசியம்போலும். இவ்வித புணர்ச்சியே பெரிய உயிர்கள் சில மாறுதலுடன் இன்றைக்கும் செய்து வருகின்றன.

ஒற்றைப்பை கிருமிகளுக்குமேல் பல பை கிருமிகள் இருக்கின்றன. இந்த பல பை கிருமிகளில் நாம் ஒருவர். இந்த பல பை கிருமிகள் ஒரு காலத்தில் ஒற்றைப் பை கிருமிகளாக இருந்து, பல பை கிருமிகளாக மாறி வந்தவை. எப்படியெனில் பல பை கிருமிகள் பிறக்கும்போது ஒற்றைப்பை கிருமிகளாகவே உறபத்தியாகின்றன. அப்படி உற்பத்தியான ஒற்றைப்பை, இரண்டு, நான்கு, எட்டு, பதினாறு, இன்னும் அதிகமாகப் பிரிந்து, தனித்தனியே வாழாமல் எல்லாம் ஒன்றாக ஒட்டிக்கொண்டு வாழ்கின்றன.

இப்படி உண்டாகும் பல பை கிருமிகளில், ஒரு பை சுக்கிலமாகவும் (Sperm Cell) மற்றோர் பை சுரோணிதமாகவும் (Egg Cell) மாறி, அந்த பல பை கிருமியில் தனித்து இருக்கின்றன. பல பை கொண்ட சீவன் பக்குவம் அடைந்தகாலை, இந்த சுக்கில சுரோணிதப் பைகள் வெளிப்பட்டு இரண்டும் ஒன்றாகச்சேர்ந்து, தத்தம் பெற்றோரைப்போல் உருவமடைகின்றன. இந்த விதமாகத்தான் மனிதர்களாகிய காமும் பிரஜா விருத்தி செய்து வருகின்றோம்.

காமும் முதலில் ஒற்றைப் பை கிருமியாக ஆணும் பெண்ணும் கூடிய பிறகு தான் வயிற்றில் ஜனிக்கின்றோம். இந்த மனிதப்பையை (Fertilised ovum) என்பார். இந்தப்பை ஒன்று இரண்டாக, இரண்டு நான்காக இம்மாதிரிகோடானகோடி கிருமிகளாகபரிணமித்து அந்தந்த அவையவங்களாக மாறுகின்றன. இந்த பலவேறுபட்ட அவையவங்களில் ஆண்பீஜத்தில் பிரஜா விருத்திக்கு வேண்டிய ஆண் பை (Sperm Cell) தங்கிவிடுகின்றது. அதே காரியத்துக்கு வேண்டிய பெண் பை (Egg Cell) தாய் கர்ப்பத்தில் தங்கிவிடுகின்றது. சம்போகத்தில் ஆண்பை சலிதமாகி, பெண்பையோடு கலந்துகொள்கின்றது. இதைத்தான் கர்ப்பம் தரித்தல் (Pregnency) என்று சொல்லுவார்கள். இந்த சாமான்ய காரியத்தைத்தான் நமது மதஸ்தர்களும், தத்துவஞானிகளும், கவிகளும், புராணிகர்களும், விசேஷப்படுத்தி இந்த நடவடிக்கைக்கு, அன்பென்றும், ஆசையென்றும், காதலென்றும், பெயரிட்டு வர்ணித்து வாழ்த்துகின்றார்கள். கடைசியில் காதல் என்பது, பிரஜாவிருத்திக்கு வேண்டிய நடவடிக்கை. இந்த நடவடிக்கை சிறுகிருமிமுதல் பெரிய ஜீவன்வரை ஒன்றே. இந்த நடத்தை முடிவு அடைய சிற்சில உபநடவடிக்கை பெரிய உயிர்களுக்கு வேண்டியதாயிற்று. பூச்சிகள் சம்போகத்துக்கு முன் ஒன்றைஒன்று தொட்டுக்கொள்கின்றன.

மின்மினிப்பூச்சிகள் வெளிச்சத்தைக்காட்டி பெண்களை அழைக்கின்றன. தவளை இரைச்சலிட்டு பெண்ணை நெருங்கி வரவழைக்கின்றது. பெரிய உயிர்கள் இன்னும் வேண்டிய உயர்ந்த நடத்தையைக்கொண்டு பெண்களை வசப்படுத்துகின்றனர். ஆண் மயிலிற்கு தோகை உண்டானதும் இதற்காகவே. ஆண்சிங்கத்தின் பிடரிமயிரும் இந்த நடத்தைக்காகவே. காதலென்று வழங்கும் நடத்தையும் மனிதனும், ன்திரீயும் சம்போகத்திற்கு எழும் காரியங்களாகும்.

ஆதலின் காதலென்னு வழங்கும் கடத்தை எல்லா உயிர்களிடமும் உண்டு. ஆதியிலும் அந்தத்திலும் உயிரின் பிரஜாவிருத்திக்கு ஏற்பட்டது இக்காக் காதலென அறிக. அந்தந்த உயிர்கள் காட்டும் காதலின் வித்தியாசம் நடை முறையில் மாத்திரமே ஒழிய வேறொருவித வித்தியாசமுமில்லை. முடிவில் இரண்டு கிருமிகள் செய்யும் சம்போகத்திற்கும், மக்கள் செய்யும் சம்போகத்திற்கும் யாதொரு வித்தியாசமும் கிடையா. இரண்டு ஒற்றைப்பைக்கிருமிகள் வெளியில் வாழ்ந்து பிரஜா விருத்திக்காக ஒன்றாகக்கூடி "புத்திர சந்தானம்" பெருகின்றன. பலபைகொண்ட "கிருமிகளாகிய" காம் பிரஜா விருத்திக்காக நமது இரண்டு கிருமிப்பைகள் ஒன்றாகத் தாய்வயிற்றில் சேருவதால் புத்திர சந்தானம் பெறுகின்றோம்.

கல்யாணமென்றால் என்ன?

மக்களின் ஆணும் பெண்ணும் பிரஜா விருத்திக்காகக் கூடி வாழ்வதுதான் கல்யாணமெனப்படும். கல்யாணமென்றால் (Union of Man and Woman for the propagation of the race) மனித குலம் விருத்தியாக ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கையைத் தான் கல்யாணம் என்று வழங்கப்படும். இந்த வாழ்க்கை பல உயிர்களிடத்தும் காணலாம். இணை பிரியாத பட்சிகளுமுண்டு. நமது மிருகப் பங்காளிகளாகிய காட்டு மனிதக குரங்குகள் இரண்டொரு பெண் குரங்குகளுடன் குழந்தைகள் புடைசூழ வாழ்கின்றன. ஆனால் பெரும் பான்மை உயிர்கள் சம்போக காலத்திற்குப் பின் பிரிந்துபோகின்றன. ஆனால் மனிதன் மற்ற மிருகங்களைவிட சக்தியற்றவனாக இருந்து வந்தபடியால் குழந்தைகளைப் பாதுகாக்க நெடுங்காலம் பெண்ணுடன் கூடி வாழ வேண்டி வந்தது. இந்தப் பெருங்காலம் கொண்ட வாழ்க்கை வேண்டியதாய் இருந்தபடியால் மனிதரில் ஆணும் பெண்ணும் நீண்டகாலம் கூடி வாழ வேண்டியதாய் விட்டது. குழந்தைபெற ஆணும் பெண்ணும் சேருகின்றனர். குழந்தை பெற்றபிறகு அதனைக் காப்பாற்ற ஆணும் பெண்ணும் கூடி வாழ்கின்றனர். இந்தக் கூடிவாழும் நிலைமையைத் தான் கல்யாணமெனப்படும். இதில் எந்த தெய்வீகமுமில்லை. விசேஷமுமில்லை, நிவேதனமுமில்லை, இயற்கையில், உண்டான இந்த கூடிவாழும் வாழ்வை மதஸ்தர்களும், புராணிகர்களும் மூடச் சடங்குகளால் (Stupid Ceremonies) கட்டுப்

படுத்தினார்கள். இந்த மூடப் பழக்கங்களே பெண்கள் அடிமையானதற்குக் காரணமாகும்.

கற்பென்றால் என்ன?

ஆதியில் கற்பு என்னும் நடத்தை (Behaviour) பொறாமையால் உண்டாயிருக்க வேண்டும். சேவல் மற்ற சேவல்களை பெட்டையுடன் சேரவொட்டாமல் கொத்தித் துரத்துகின்றது. காய்களும் அம்மாதிரியாகவே பெட்டை நாய்களுக்காகச் சண்டையிடுகின்றன. உயர்ந்த உயிர்கள் பெண்ணை மற்ற ஆண்கள் தொடாமல் இருக்கப் போர் பரிந்து மடிந்தும் போகின்றன. இந்த மிருகப் பொறாமை (Jealousy) மனிதனுக்கும் பரம்பரை சம்பந்தமாக உண்டானது. கற்புக்குப் பொறாமையே முக்கிய ஆதாரமென்று உணராமல் கற்பைப்பற்றி அனேக கொடூர கட்டுத் திட்டங்களைக் கற்பித்து பெண்களை துன்புறுத்த நேரிட்டது. இந்தக் கொடுமைக்கு மதங்களும் புராணங்களும் முக்கிய காரணம். கவிகளும் இந்தக்காரியத்திற்கு உடன்பட்டவர்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு இயற்கையாகவே உண்டாகவேண்டிய அவசியம் இயற்கையிலேயே இருந்து வருகின்றது. பிள்ளைகளைச் சரியாகப் பெற்று வளர்க்கும் பாகியம் மக்களுக்குள் இருக்கும்வரை இருவரிடமும் கற்பு நிலைத்திருக்க வேண்டியதே முதலில பொறாமையால் உண்டான கற்பென்னும் நிலை. உயிர்கள் சமூக வாழ்க்கையை அனுசரிக்க அனுசரிக்க வாழ்வுக்கு அவசியமாயிற்று. காலாகாலங்களாக ஆணும் பெண்ணும் ஏறக்குறைய கற்பை அனுசரித்து வந்தபடியால் தான் மனித சமூகம் மிருகங்களைவென்று உலகில் நிலைத்தது. பெற்றவுடன் குழந்தைகளை கடுத்தெருவில் விட்டு ஆணும் பெண்ணும் பிரிந்து இருந்தால் மனிதப் பூண்டு அழிந்தே போய் இருக்கும். மனிதன் உலகில் நிலைத்ததற்கு முக்கிய காரணம கற்பே. இதனைப் பல பட்சிகளிடத்தும் உயர் மிருகங்களினிடத்தும், நமது தூர பங்காளிகளாகிய ஓராங் முதலிய காட்டுமனிதக் குரங்குகளிடத்தும் காணலாம்.

கற்பை இழப்பது குற்றமா?

கல்யாணமென்றால் ஆணும் பெண்ணும் கூடிவாழ்வதாகும். இந்த வாழ்வுக்கு இரண்டுபேர் சம்மதமும் வேண்டும். சம்மதமில்லாமற்போமாகில் இல்லறவாழ்வுக்கு அபாயம்நேரிடும். இந்த அபாயத்தை இரண்டுபேர் சம்மதியால் போக்க

லாம். போக்க முடியாவிடில் கூட்டுறவைக் கலைத்துக்கொள் வது தான் உத்தமம். ஆனால் மக்களைப் பெற்றபிறகு இல் லற வாழ்வு வேறுவித நிலை அடைகிறது. அதாவது பிள் ளைகளை என்றவர்களுக்கு பிள்ளைகளைக் காப்பாற்றும் கடமை ஏற்பட்டு விடுகிறது. இந்தக் கடமை உள்ளவரை கூட்டுறவைக் கலைக்க முடியாது. ஆதலின் ஆணும் பெண் ணும் கூடியபிறகு எளிதில் தங்கள் கூட்டுறவை கலைக்கவிடப் படாது. பிள்ளை பெறுவதற்கு முன் ஸ்திரீ புருஷர்கள் ஒன்று கூடி வாழ்வது அவரவர் கடமையாய் நிற்கும். பெற்றபின் அவர்கள் பிரியாமல் இருப்பது சமூகக் கடமையாய் விடுகின் றது. இதற்குத்தான் கற்பை சமூகம் வற்புறுத்துகிறது. ஆனால் சில சமயங்களில் பிள்ளைகளைப் பெற்ற பிறகு புரு ஷன் பெண் ஜாதியாக தாய் தந்தையர் வாழ முடியாமற்போ கின்றது. அந்த வேளையில் இருவரும் பிரிந்து விடுவதுதான் பிள்ளைகளுக்கு நன்மை. இந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளை களை யாருடைய சம்ரட்சணையில் வைப்பது என்ற கேள் விக்கு ராஷ்யத்திட்டம் இருவருமே சம்ரட்சணை செய்யவேண் டுமென்று விடை பகருகிறது, இவ்விதத்திட்டத்தால் ரஷ்ய நாட்டில் மற்ற தேசங்களைப்போல் விவாகரத்து (Divorce) அதிகமில்லையாம்.

சுருங்க உரைக்கில் ஆதியில் உலகில் சிறு கிருமிகள் உண் டாயின, அவைகள் (Single Cell) ஒரு பையுடையவனாய் இருந்தன. இந்த ஒற்றைப்பை கிருமிகள் ஆதியில் ஒன்று இரண்டாகப் பிரிந்து தனது சந்ததியை விருத்தி செய்து கொண்டு வந்தது. இன்னொரு விதமாகவும் இந்த ஒற்றைப் பை சந்ததி விருத்தி அடைந்துகொண்டு வந்தது. அதாவது ஒரு பையிலே சிறு முட்டைகள் உண்டாகி வெளிப்பட்டன. பல காலம் இம்மாதிரியாக தனித்தே இந்தக் கிருமிகள் தனித் தனியாகத் தனது சந்ததியை விருத்திசெய்துகொண்டு வந்த நிமித்தம் பலங் குன்றி வந்தபடியால் இரண்டு பைகள் சை யோகம் செய்ய கோர்த்தது. இதுதான் பெரிய உயிர்கள் சரீரத்திற்கு அஸ்திவாரம்.

இரண்டாவதாகச் சிறு கிருமிகள் தனித்து வாழ்ந்து வந்ததிலிருந்து இரண்டு மூன்று கூட்டுறவுகொண்டு வாழ ஆரம்பித்தன. இந்த பல பை கிருமிகளில் சில கிருமிகளுக் குள் சிலபைகள் (Cells) அந்தந்த அவையவங்களாகவும் சிலவைகள் மாத்திரம் (To carry on reproduction) பிரஜா

விருத்தி செய்யத் தனியாகவே அங்கங்த ஜீவனுக்குள் ஒரே இடத்தில் தங்கிவந்தன. இந்தச் சந்ததிக்குரிய பைகள் ஒன்று ஆண் சுக்கிலமாகவும் மற்றொன்று பெண்சுரோணிக மாகவும் ஒரே சீவ உருவத்தில் தங்கியிருந்தன, நத்தைப்பூச்சி (Earth worms) அட்டை (Leeches) இந்த ஜீவன்களில் ஆணும் பெண்ணும் ஒரேதிரேகத்தில் காணப்படும். இதனை (Hermaphrodite) அதாவது ஆணும் பெண்ணும் கூடிய உயிர் என்பார்கள். அர்த்தனாரீஸ்வரன் என்ற கற்பனைக் கடவுளும் காக்குப் பூச்சியைப் போன்ற ஒரு "எர்மாபிரோ டைட்" போலும்!

இந்த ஒரு திரேகத்தில் ஆணும் பெண்ணும் கூடிய சீவன்களில் ஆண் பையும் (Sperm) பெண்பையும் (Egg) வெளிப்பட்டு கூடிப் பிரஜாவிருத்தி அடைகின்றன.

மூன்றாவது, ஆண் உருவமும் பெண் உருவமும் கூடிய சீவன்களில் ஒன்று ஆணாகவே தனித்துப் பிறந்திருக்க வேண்டும். மற்றொன்று தனித்த பெண்ணாகவே பிறந்திருக் கவேண்டும். ஆகியில் இவ்விதமாக ஆண்குறியும் பெண்குறியு முள்ள ஒரு உயிரினிடத்திலிருந்து வெவ்வேறு உருவங்களாக ஜனித்துப்பெரிய உருவங்களாகிய நாமும் உலகில் ஆணாகவும் பெண்ணாகவும் வித்தியாசமடைந்து பரிணமித்தோம். நமது மூதாதைகள் ஒரு காலத்தில் ஆணும் பெண்ணும் கூடிய திரேகத்தைப் பெற்றிருந்தார்கள என்பதற்கு அத்தாட்சி நம்மில் சில குழந்தைகள் அவ்வாறே பிறந்திருப்பதைப் பார்க்கலாம். ஆண் பெண்ணாகவும் பெண் ஆணாக மாறுவ தும் பூர்வகால நமது (Hermaphrodite) சந்ததியாவென அறிக.

ஆகியில் பிரஜா விருத்திக்காகவே இரண்டு ஒற்றைப்பை பிராணிகள் சையோகம் செய்யத் தலைப்பட்டன. அந்தப் பூர்வ காலக் கிருமிகளிலிருந்து பெறப்பட்ட பல பைகளைக் கொண்ட நாமும் சந்தான விருத்திக்கே ஆணும் பெண்ணு மாகப் பரிணமித்து புணர்ந்து வருகின்றோம். இந்தப் புணர்ச் சிக்குவேண்டி பல நடத்தைகள் நமக்கு உண்டாயின. முத்தங் கொடுப்பதும் ஆடுவதும் பாடுவதும் முதலிய நடத்தைகள் (Behaviour) யாவும் ஆண் பெண் சையோகத்திற்காக உண் டாயின. நடத்தைகளைப் பேசத்தெரிந்த பிறகு அன்பு, ஆசை, மோகம் காதல் என்று பெயர் கொடுத்தோம்.

கிறு ... ம

இந்தி ஆதிக்கம்?

ப கி.

I

இரவு மணி 7-இருக்கும். முன்னறிவிப்பின்படி தோழர் அடிமைநாதம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பமாயிற்று. கியாஸ் லயிட், சோடாபாட்டில், நாற்காலிகள், கொண்டுவந்தவர்களோடு சேர்த்து கூட்டத்தில் சுமார் 150 பேர்கள் பிரசன்னமாயிருந்தனர். புதிதாகக் குல்லாய் மாட்டப்பட்ட 7-8 காங் காரஸ் தொண்டர்கள் மேடையைச் சுற்றிலும் நின்றுக்கொண்டிருந்தனர். அவர்கள் கரங்களிலே தடித்த மூங்கிற் கம்புகளில் மாட்டப்பட்ட காங் காரஸ் மூவர்ணக்கொடிகளைப் பிடித்துக் கொண்டிருந்தனர். அந்தத் தடிகள் கொடிகளுக்காக தயாரிக்கப்பட்டனவல்ல என்பதை அதன் உறுதியும், பருமனுமான தோற்றம் விளக்கிற்று. தலைவர் அடிமைநாதம் பிள்ளையின் சிறிய முன்னுரைக்குப் பின்னர் தோழர் விஷ்ணுசர்மா ஆய்யங்கார் எழுந்தார். "கட்டாய இந்தியும்—தமிழரின் மடமையும்" என்பது பற்றித் தன் சுயிலினுமினிய குரல் திறந்து பிரசங்கமாரி பொழியத்தொடங்கினார்.

இந்த "தேசத்துரோக வகுப்புவாத, சுயநல, நாஸ்திக, சர்க்கார் பதவி தாச வேட்டை சுயமரியாதைக் கும்பல்" என்ற சிறிதும் தேவையற்ற,

---

சமூக வாழ்வுக்கு (Social Life) முக்கியமாக மனித சமூக வாழ்வுக்கு கற்பனா சக்தியை அவசியமாகும். அது இல்லாமற் போயாகில் சமூக விருத்தி அடையாது. மனிதப் பூண்டே அழிவடையுமென்று தோன்றுகிறது. முதலில் கற்பு பொறாமையால் ஏற்பட்டு சமூக வாழ்க்கை பெருகவும் புத்திரப் பாதுகாப்புக்கு அத்தியாவசியமாயிற்று. ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு எவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கும் மனித சந்ததி விருத்தி அடையுமென்பதற்குத் தடையில்லை. ஆனால் சுட்டாயமில்லாத வாழ்க்கையில்தான் கற்பு வளரும். கொடூர கட்டுத்திட்டங்களால் பொறாமையும் சந்தேகமும் அதிகரித்து மனித வாழ்க்கை குன்றி நாசமாய் விடும்.

பெருந்தன்மையான இனிய வார்த்தைகளில் தொடங்கிய அந்தப்பல்லவி "பார்ப்பனீயச் சேஷ்டைக்கு"க்கு வால் நீளுவதைப்போல நெடுக நீண்டு கொண்டே சென்று, இந்தி எதிர்ப்பு சத்தியக்கிரகம் செய்யும் தொண்டர்கள் முதல் தமிழ் நாட்டின் தலைவர் பெரியார் ஈ வெ ரா. வரைக்கும் உள்ள சகல தமிழர்களையும், அய்யங்காரின் நாக்கு வெகு கடுமையாகச் சுவைத்தது! கோரப்பசியுடன் தாக்கிற்று!

மேலும் பேசுகையில், நமது மகத்தான புராதன ஹிந்து தர்மங்களையும், கலைச் செல்வங்களையும் புனருத்தாரணம் செய்வதற்காகவே இந்தியைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், எதிர்ப்புக் கூச்சலைப் பொருட்படுத்தக் கூடாதென்றும், இந்தியை எதிர்ப்பவன் காங்காரஸ்காரனாயினும் அவன் தேசத்துரோகியாவானென்றும் [illegible] மேல் ஆணையிட்டுச்சொல்லுகிறேன் என்றும் ஆத்திரத்துடன் கூறிவிட்டு பாவம்! காகோஷத்தை எதிர் பார்த்தார். அவர் நோக்கமறிந்த தலைவர் பிள்ளையவர்கள் கைகொலி செய்யவே, மேலும் சிலர் 'சடபட' வென்று கை தட்டினர். அய்யங்கார் சுவாமிகளுக்குத் தலைமீது எதையோ வைத்த மாதிரி உச்சி குளிர்ந்து போய் விட்டது. அளவுக்கு மிஞ்சிய உற்சாகம் அவர் வதனத்திலே தாண்டவமாடியது. வெற்றிப் புன்னகை புரிந்தார்.

அச்சமயத்தில் கூட்டத்தின் மத்தியிலிருந்த ஒரு வாலிபன் எழுந்து நின்று, பிரசங்கியாரைப்பார்த்து "அய்யங்கார்வாள்! என்ன இது அண்டப்புரட்டாயிருக்கிறது? இந்தியைப் பொதுமொழியாகக் கட்டாயப்படுத்த காங்கரஸிலே எவ்விதத் தீர்மானமும் செய்யப்படாதிருக்கையில், இந்தியை மறுக்கும் காங்கரஸ்காரன் எப்படி தேசத்துரோகியாவான்? புராதன இந்து—தர்மம் என்பதான மனுதர்மச் சட்டத்தைப் புதுப்பித்து தமிழர்களைப் "பார்ப்பன அடிமை"களாகத்தான் தமிழ் நாட்டில் இந்நாளழைப்போ? இந்தி கட்டாயபாடத்தை சுயமரியாதைக்காரர்கள் மட்டுந்தான் எதிர்கிறார்களா? காங்கரஸ் வாதிகள், சமதர்மிகள், முஸ்லிம்கள், தொழிலாளர்கள் ஆதிதிராவிடர்கள் முதலியவர்கள் எதிர்க்கவில்லையா?" என்று கடாவினான்.

"இந்தி வீழ்க! தமிழ் வாழ்க!" என்ற கோஷம் ஒரு மூலையினின்றும் கிளம்பிற்று. அய்யங்காருக்கு நெஞ்சில் "கரு"க்கென்றது. அடிமை காதம் பிள்ளையின் முகத்தை நோக்கினார். "இதற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருப்பது நல்லதல்ல. ரஸாபாசம் ஏற்படும். அந்தப் பயல்கள் இவனை முன்னால் தள்ளிவிட்டிருக்கிறார்கள். புத்தி கற்பிக்க வேண்டியது தான்" என்று மெதுவாகக் கூறினார். உடன் பிள்ளையவர்கள் அந்த புதுக்குல்லாய் தொண்டர்களை நோக்கி ஏதோ சமிக்ஞை செய்து விட்டு, கம்பீரமாக எழுந்து, கூட்டத்தை நோக்கி "இது காங்காரஸ் கூட்டம், இந்தியை எதிர்ப்பவர்களுக்கு இங்கு வேலையில்லை, அவர்கள் மரியாதையாக அப்பால்போய் விடவேண்டும்" என்று கட்டளையிட்டார். அகம்பாவமும், அற்பத்தனமும் நிறைந்த அவ்வார்த்

தைகள் கூட்டத்திலிருந்த பலருக்குக் கோபத்தை மூட்டின. மீண்டும் "இந்தி வீழ்க! தமிழ் வாழ்க!" என்ற கோஷம்!

எல்லோரும் கும்பலாக எழுந்து விட்டனர். உடன் அந்தபுதுக்குல்லாய் மூவர்ணக்கொடியர்கள் கூட்டத்தினுள் புகுந்தனர். கொடிகள் மாட்டிய தடிகள் ஆகாயத்திலும், பூமியிலும் சுழன்று சுழன்று ஈர்த்தனம் புரியத்தொடங்கின. கூட்டத்தில் கூச்சல்! குழப்பம்! அலறல்! அந்த வாலிபனின் தலை மீது ஒருபலத்த தடியடி வீழ்ந்தது. வீறிட்ட வண்ணம் வீழ்ந்தான் வாலிபன். மீண்டும் பலத்த கூக்குரல்! ரகளை! குழப்பம்! மளமளவென்று கூட்டம் கலைந்தது. தொண்டர் தம் பெருமை சொல்லவும் தரமோ!

சிறிது நேரத்தில் குண்டாந்தடிகளுடன் போலீஸ் புலிகள் பிரசன்னமாயினர் என்னபயன்? கூட்டம் கலைந்து விட்டது. மேடை மீதிருந்த பிரசங்கியர் விஷப்பூச்சி அய்யங்காரும், தலைவர் அடிமைநாதம் பிள்ளையும் போனவிடம் தெரியவில்லை, புதிய குல்லாய் வாலாக்களான குண்டர்களும் இல்லை—தொண்டர்களும் அந்தப் புனிதமான 'தேசியக்கொடி"யின் தடிகளைத் தூக்கிக்கொண்டு எங்கோ மறைந்து விட்டனர். அடியுண்டு வீழ்ந்த அந்த வாலிபனிடமும், அவனைச் சுற்றி லும்மிருந்த தோழர்களிடமும், " இதென்ன காங்கரசப்பா, காங்கரஸ்? அந்தர தர்பாராயிருக்கிறதே! போதும் சுவாமி சுயராச்சியம்! என்று பேசிக்கொண்டு செல்லும் பாமர மக்களிடமுந்தான் போலீஸ்காரர் தங்கள் சமாதானத்தை நிலை நாட்டினர்! சாந்தியும் சமாதானமும் செத்துப் போகாமல் காப்பாற்றப்பட்டு விட்டன!

II

தலையிலும், இடது முழங்காலின் கீழும் பலத்த கட்டுகளுடன் பலவீனத்தோடு நாராயணன் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தான். அவனது கிழத்தாய் மிக்க விசனத்துடன் தலைமாட்டில் உட்கார்ந்துக் கொண்டிருந்தாள். தோழர்களிற் சிலர் அவனைச் சூழ்ந்து நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டு மிருந்தனர். அவனது இளமனைவி ரங்கம்மாள் சமையல் அறையில் தன் கணவனுக்கு "பார்லிக்கஞ்சி" காய்ச்சிக்கொண்டிருந்தாள்.

நாராயணன் தன் உடம்புவலியையும், வேதனையும் பொருட் படுத்தாமல் சிரமத்துடன் தன் நண்பன் முத்துசாமியை நோக்கிக் கூறினான் "முத்து! நமதுநாடு சுதந்தரம் பெறுவதானால் அது காங்கரஸ் மகாசபை ஒன்றால் தான் முடியும் என்பதை பிடிவாதமாக நம்பியிருந்தேன். இன்னும் நம்பியிருக்க வேண்டுமென்றுதான் எண்ணுகிறேன். எனினும் என் மனச்சாட்சி மறுக்கிறது. என் நம்பிக்கை தளர்ந்துக் கொண்டே வருகிறது. நேற்றைய கூட்டத்திலே நான் கேட்டதில் என்ன தவறு? மக்களுக்குள் வேற்றுமையும் உயர்வு தாழ்வும் அடிமைத்

தனமும் கற்பித்தறே புராதன ஆரிய தர்மங்களாயிருக்க, அவைகளைப் புனருத்தாரணம் செய்வதற்காகவே இந்தியைக் கற்க வேண்டுமென்றால் அதை எப்படி நாம் ஒப்புக்கொள்ள முடியும்? பேச்சுச் சுதந்திரம் அபிப்பிராய சுதந்தரம் கோரும் காங்கரஸ் ஆட்சியிலே நியாயத்தைச் சொல்வோருக்கு அடியும் உதையுமா பரிசு? இந்தி நுழைப்பு ஆரியச் சூழ்ச்சியென்பதில் என்ன தப்பு? சுயமரியாதைக்காரர் சொல்வதை நான் கேவி செய்திருக்கிறேன். ஆனால் உண்மை என்ன? ஒரு காட்டுக்கு மற்றொருநாடு அடிமைப்பட்டிருப்பதைக் காட்டிலும் ஒரு மனிதனுக்கு மற்றொருமனிதன் அடிமைப்பட்டிருப்பது மகா கேவலம்! கொடுமை!! மனிதாபிமானம் இல்லாதவனுக்கு என்ன தேசாபிமானம் வேண்டியிருக்கிறது?"

"நாராயணா! உடம்பு இருந்தும் நிலைமையில் நீ அதிகமாகப்பேசக் கூடாதப்பா! உனக்குமாத்திரமல்ல எங்கள் கண்களும் திறந்து கொண்டன! பார்ப்பனர்களை மட்டும் குறை சொல்வதில் பயனில்லை. அடிமை நாதம் பின்னையைப் போன்ற சமூகத் துரோகிகள்—சுயநலக் கொழுப்பர்கள் அவர்களுடைய தை பொம்மைகளாக இருக்கும்போது அவர்கள் எதைத்தான் செய்யத் துணியமாட்டார்கள்? பார்ப்போம்! காற்று ஒரே பக்கமாகவா வீசிக் கொண்டிருக்கும்?" என்று தேறுதல் கூறினான் முத்துசாமி.

அச்சமயம் அடிமைநாதம் பிள்ளையின் காரியதரிசியான ஆறுமுகமய்யர் அங்குவந்து சேர்ந்தார். பிள்ளை பெரிய லேவாதேவிக்காரர், செல்வந்தர். நாராயணன் ஏதோ அவசர காரியத்துக்காக தன்வீட்டை அவரிடம் குதவை வைத்து ரூபாய் 400—கடன் வாங்கியிருந்தான். அய்யரை மரியாதையோடு வரவேற்று ஆசனமளித்தான். நாராயணனைப் பார்த்தவண்ணம் வெறுப்புடன் அவர் கூறுகிறார்.

"என்ன நாராயணா! நீ ஒரு காங்காஸ்காரனாயிருந்தும் உன்னிடம் பிராமணத்துவேஷம் எப்படி வந்தது? நேற்றுமாலை காந்தி சவுக்கில் பிள்ளைவாள் தலைமையில் கூடிய "இந்தி ஆதரிப்பு"க் கூட்டத்தில் விஷப்பூச்சி அய்யங்காரிடம் கேள்விகள் கேட்டு கலவரம் செய்தாயாமே? உனக்கேன் இந்த வம்பெல்லாம்? பிள்ளைவாள்உன்மேல் நிரம்ப கோபத்துடனிருக்கிறார். நீ அவரிடம் வாங்கியுள்ள கடனை நாளை பகலுக்குள் செலுத்திவிட வேண்டுமாம், இல்லாவிடில் வீட்டைக் காலி செய்து கொடுத்துவிட வேண்டுமாம்; இரண்டிலொன்று செய்யாவிட்டால் நீ பெரிய ஆபத்துக்கு ஆளாக நேரிடும் என்று உன்னிடம் சொல்லச் சொன்னார் அதற்காகத் தான் நான் வந்தேன்."

"அப்படியே ஆகட்டும்" என்றான் நாராயணன் பொங்கியமனதுடன். அவர் எழுந்துச் சென்றார் மறுவார்த்தையின்றி.

நாராயணன் பாரதரித்திரனல்லாவாயினும் திடீரென்று ரூபா400-க்கு எங்கே போவது? அவசரத்தில் உதவும் பணக்கார நண்பர்களு

மில்லை. எனவே அவன் மனம் பொறுத்தும் தத்தளித்து வாடியது. அடிமை நாதம் பிள்ளையின் பணத்திமிரையும் இரக்கமற்ற தன்மையையும், குறுகிய நோக்கத்தையும் எண்ணி எண்ணி நண்பாகள் மனம் கொதித்தனர்.

"அடப்பாவி! நியாயத்தைச் சொல்லுகின்ற என் மகனை ஆட்களை விட்டு அடித்துப் போட்டது மல்லாமல், வெந்த புண்ணில் வேலிடுகிறதைப்போல இச்சமயத்திலா கடன் வசூல் பண்ணுவது? உன்பணத்தில் இடி விழ! நீ நாசமாய்ப் போகமாட்டாயா?" என்று மனங்கசந்து சாபமிட்டாள் அவனுடைய கிழத்தாய்.

நாராயணன் எவ்வளவுமானியோ அதில் அணுவும் குறைந்தவளல்ல ரங்கம்மாள். மேலும் நன்றாகப்படித்தவள். அவளுடைய தகப்பனார் ஒரு தமிழ்ப்பண்டிதராகையால் தமிழில் அவளுக்கு அளவு கடந்த பிரேமை.

"தமிழ் எனில் எம்முயிர்ப்பொருளாம்—இன்பத்தமிழ் குன்று
மேல் தமிழ்நாடெங்குமிருளாம்"

என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் வரிகளை அவள் மனம் தன்னிச்சையாகச் சதாபாடிக்கொண்டே யிருக்கும். தன் கணவனுக்கு வரும் மான அவமானத்தைத் தன்னுடையதாகக் கருதும் மெய்யுணர்ச்சியும், அவளுடைய தமிழ்க்காதலும் சேர்ந்து அவளை ஒரு தியாகத்திற்குத் தூண்டின. தன் பெற்றோர்கள் தனக்கு சீதனம் கொடுத்த நகைகளிற் சிலவற்றைப் பணமாக்கி அந்த "சமூகத்துரோகி"யின் கடனைத் தீர்க்கச் சம்மதித்தாள் அந்த யுவதி! நாராயணனுக்கு அதுவிருப்பமில்லையெனினும் வேறு வழியில்லாமையால் அங்ஙனமே செய்யச் சம்மதித்தான். கடனும் ஒழிந்தது.

"ரங்கம்! பணத்தடிமை நீங்கிற்று. இனி பார்ப்பன அடிமை நீங்க முயற்சிக்க வேண்டும்" என்றான் நாராயணன். ரங்கம்மாள் புன்னகையால் அதனை ஆமோதித்தவண்ணம் "மூவிரல் உடம்பு குணமாகட்டும்" என்று தேன்மொழியில் கூறினாள் சுருக்கமாக.

வாசற்புறத்தில் யாரோ வரும் காலடியோசை கேட்டது கையில் அன்று வந்த "தினப்புலுகன்" பத்திரிகையுடன் உள்ளே நுழைந்தான் முத்துசாமி.

"முத்து! பத்திரிகையில் என்ன விசேஷம்? நம்மவூர்ச் செய்தி வந்திருக்கிறதா? என்று ஆவலுடன் கேட்டான் நாராயணன்.

"விசேஷமா! விபரீதமான விசேஷங்கள் தான்! நம்மவூர்ச் செய்தி வந்திருக்கிறது. படிக்கிறேன் கேள்" என்று சொல்லி அந்த வரிகளைப் படித்தான் முத்துசாமி.

"..... மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணங்களுக்கும், வடநாட்டாதிக்கத்தோடு நெருங்கிப்பழகுவதற்கும் இந்தி கற்பது மிக மிக அவசியமென்றும், "தமிழர்களுக்கு இந்தி கூடத்தெரியவில்லையே; அவர்களுக்கு என்ன அறிவு இருக்கப்போகிறது?" என்று வடநாட்டார் நம்மை கேலி செய்கிறார்களென்றும், தமிழ் வெறும் உம்பானால் இந்தி தான் அதற்கு உயிரென்றும், ஆங்கிலப்படிப்பால் தடிமைத்தனம் வளருமென்றும் ஸ்ரீ விஷப்பூச்சி அய்யங்கார் பி. எ. பி எல். அவர்கள் வெகு விஷமமாகக் கூறினார். மேலும் பேசுகையில் இந்தி படித்துக்கொண்டால் சமஸ்கிருதபாஷையிலுள்ள நமது மகத்தான புராதன காவியங்களை ரஸிக்கலாமென்றும், அவைகளைப் புனருத்காரணம் செய்யவேண்டுமென்றும் இந்தி வேண்டுமென்பது நாஸ்திகக் கூச்சல் என்றும், சு. ம. கும்பலின் சூழ்ச்சி யென்றும், இந்தி கட்டாய பாடத்தை மறுப்பவன் காங்காஸ்காரனாயிருந்தாலும் சரி, அவன் தேசத்துரோகியே ஆவான் என்றும் ஆணித்தரமாகக்கூறினார். கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தீண்ட காகோஷத்தின் மூலம் தங்கள் போராதரவைத் தெரிவித்தனர். அச்சமயம் கூட்டத்தில் சில சு. ம. காலிகள்புகுந்து கலவரம் விளைவிக்க முயன்றனர். ஜனங்கள் ஆத்திரமடைந்தனர். போலீஸ் பிரசன்னமானவுடன் விஷமிகள் மறைந்து விட்டனர். கூட்டம் வெகு அமைதியுடன் 'இந்திக்கி-ஜே! ராஜாஜிக்கீ-ஜே!' என்ற கோஷத்துடன் முடிந்தது. குழுமியிருந்த பெரிய கூட்டம்—மகத்தான ஜனசமுத்திரம் இந்தி கட்டாயப் பாடத்திற்குத் தமிழ் மக்களிடையே உள்ள பெரிய ஆதரவைக் காட்டுவதாகும்"

இதனைப் படிக்கக் கேட்ட நாராயணன் பிரமித்துப் போய் விட்டான் "முத்து! இதென்ன அபாண்டப் புளுகு! வாஸ்தவத்தில் இது நம்மவூர் செய்திதானா? பல்லாயிரக்கணக்கான மக்களா? சு. ம. காலிகளா? நாம் என்ன கனவுலகில் இருக்கிறோமா? கூட்டத்தில் உண்மையை விளக்கக் கேள்வி கேட்டதற்காக அஹிம்சா வாதிகளான, தேசபக்தத் திருத்தொண்டர்களால் தாக்குண்டு படுக்கையில் கிடக்கும் காங்காஸ்காரனாகிய நானா அதே கூட்டத்தைப் பற்றிய இந்தச் செய்தியை காதால் கேட்கின்றேன்? தேசிய காங்காஸ் மகாசபையின் இரும்புத்தூண்கள் என்று பெருமை கொள்ளும் ஒரு தேசீயப் பத்திரிக்கையிலா இச் செய்தி பொறிக்கப்பட்டுளது? அடாமச்சந்திரா! இதுவா தேசீயம்? இதுவா ஜனநாயகம்? இதற்குப்பெயரா சுதந்திரம்? சே! சே! இந்த மண்ணைடைக் கொழுப்பேரிய சோத்துச் சொக்கர்களின் பித்தலாட்டம் ஒழிந்தாலன்றி தேசத்துக்கு விமோசனமில்லை! இந்தியினால் தமிழும் தமிழர் சுதந்தாமும் அழிவது போல இந்தப் "புளுகன்" களால், உண்மை நியாயம், நேர்மை முதலியன தமிழ் நாட்டில் அழிக்கப்பட்டுவிடும் என்பது நிச்சயம். இந்தக் கண்மூடி தர்பாரை—பொது ஜனத்து தோரகத்தை—பார் பனீய சர்வாதிகார விஷத்தை அழிக்கும் சேவையில்—தமிழையும், தமிழர் உரிமையையும் காக்கும் தொண்டில் ஈடுபட்டுழைக்காவிட்டால் செத்த பின்பு நிச்சயமாக என் கட்டை வேகாது!" என்று மிகுந்த ஆவேசத்துடன் கூறினான் நாராயணன். பலவீனத்தால் சோர்ந்

பல் நோய்கள்.

(டாக்டர் வீ. எஸ். மணி, எல். எம். எஸ்.)

ஆரோக்கியத்திற்கும் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும் முதலில் நாம் கவனிக்க வேண்டியவை பற்களில் நோய் வராமல் தடுப்பதேயாகும். பல்லில் அநேக காரணங்களினால் சீழ் சலம், பழுப்பு, சதா ரத்தம் வருதல், துர்நாற்றம் இவை உண்டாகி தேகத்தில் கலந்து பல நோய்கள் எற்படுகின்றன.

குண்ம வயிற்றுவலி தேகத்தில் ஓவ்வொரு பாகங்களிலும் நிமிர் பிடித்து சிற்சில இடங்களில் உணர்ச்சியற்று காணுவதுடன் கைகால்களில் ஓவ்வொரு பொருத்துக்காளிலும் நோவுடன் வீக்கமும் கண்டு அத்துடன் நாள் செல்லச் செல்ல ஆகாரம் குறைந்தும், இருதய நோய் எற்படும் மற்றும் பல நோய்கண்டு மரணத்திற்கு ஏதுவாய் முடிகிறதையும், நாம் கண்ணாரக்காண்கிறோம்.

சிலருக்கு எப்போதும் வயிற்றுவலி, அத்துடன் வாய் முதல் மூலதுவாரம் வரை புண், எரிவு, மலம் அடிக்கடி கழிதல் இவைகள் கண்டு தேகம் க்ஷீணித்து மரணம் சம்பவிக்கிறது. இவ்விதநோய் சிலருக்கு பல்லில் உள்ள அசுத்தமான சலம், பழுப்பு, சீழ் இவைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் காலக்

திருந்த அவனது கண்களில் உணர்ச்சிப் பெருக்குடன் கூடிய ஒரு புத்தொளி படர்ந்து பிரகாசித்தது!

முத்துவின் உள்ளத்திலே பெரும்புயல் வீசிற்று.

தன் கணவன் குணமடைந்து சென்னையிலே நடைபெற்றும் கட்டாய இந்தி மறுப்புப் போருக்குச் செல்வதும், கூட்டத்தில் வீரம் ததும்பப் பிரசங்கிப்பதும், சிறைபடுவதுமான காட்சிகளை தன்மனக் கண்ணில் கண்டு பெரு மகிழ்ச்சியடைந்துக் கொண்டிருந்தாள் ரங்கம்மாள்.

கிரமத்தில் உள் சென்று மேற் சொன்ன வியாதிகளை உண்டு பண்ண ஏதுவாய் முடிகிறது.

இது முக்கிய காரணம். இந்தவிதமான சிற்சில நோய் கள் பல்லில் உள்ள அசுத்தங்களினால் ஏற்படுகிறதென்று தெரியாமல் தவிக்கிறார்கள். சில வைத்திய சிரோண்மணி கள் இதன் காரணத்தை கவனிக்காமல் நோய்க்கு வேண்டிய மருந்துகள் கொடுத்து குணமில்லாமல் நோய்களுக்கு அவஸ் தை கூடுதலால் இருதய நோயும் மற்றும் சிற்சில நோயும் கண்டு மரித்துவிடுகிறார்கள். பல்நோய்கள் மருந்து உட் கொண்டு குணத்திற்கு வராமலே டல்லின் சலத்தாலும், சீழா லும் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்து ஆடுகிற அல்லது சொத்தையான பற்களைப் பிடுங்கிவிட்டு மீதம் இருக்கிற பல் லையும் சுத்தம் செய்து விட்டே பிறகு நோயாளிகள் குண மடைந்து திடகாத்திரமாயிருப்பதையும் காம் கன்றாய் அறி வோம்.

சாதாரணமாக யாவரும் காலையில் ஏதாவது பல்பொடி அல்லது அங்கிய காட்டிலிருந்து வரக்கூடிய பற்பசை இவை களை உபயோகித்து காலைக் கடனை முடித்து விடுகிறார்கள். தங்களுடைய நினைப்பில் பல்லை சுத்தம் பண்ணியாய் விட் டது என்ற எண்ணம். காம் காலை 8-மணி முதல் இரவு 8-மணிவரை ஆகாரங்கள் உட்கொள்ளுகிறோம். அவைகளுக் கெல்லாம் ஒரே ஒரு முறைதான் பல் விளக்குகிறோம்.

ஆனால், ஒருமுறை விளக்குவது போதாது. இரவில் கட் டாயம் ஆகாரத்திற்குப்பின் பல்லை விளக்கிக் கொன்டுதான் படுக்கைக்கு போகவேண்டும். பல் விளக்கும்போது விரல் கொண்டு ஈறுகளை மேலும் கீழும் கன்றாய் தேய்த்துக் கொள் ளல் நலம்.

இரவில் பல் விளக்கவில்லை என்றால் இரவில் சாப்பிடு கிற ஆகாரம் சிற் சில பல் இடுக்குகளில் படிந்து, அது நோஞ் செல்லுசாற்றம் உண்டாகியும் பிமெண்டு மாதிரி பல்களில் கறை படிந்துவிடும்.

அதனால் பல்லில் சீழ் உண்டாகி துர்நாற்றத்துடன் பல்லும் கெட்டுப் போகிறது.

ஆகையால் ஒவ்வொருவரும் காலை மாலை பல்லை சுத்தம் செய்து கொள்ளல் வேண்டும். பிரஷ் போட்டு தேய்த்தால் மட்டும் போதாது பல் இடுக்குகளில் உள்ள அசுத்தங்களை சிறு குச்சி கொண்டு குத்தி பிறகு வெந்நீர் கொண்டு வாயை அலம்பிக் கொண்டால் மேல் சொன்ன அசுத்தங்கள் பல்லில் படியாது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற வாக்கியப்படி இந்த மரத்தினுடைய வேர்களேனும் குச்சிகளேனும் வைத்து பல்லை சுத்தம் செய்துகொள்வது நலம். நமது பண்டைக்கால வயோதிகர்கள் வெகு நான் ஜீவித்து, அவர்களது பல் கெட்டுப் போகாமல் பல் டாக்டரையோ, பற்பசைகளையோ தங்களுக்கு ஆதாரவாகக் கொள்ளவில்லையென்று நாம் பலரால் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இப்பொழுதும் தேகாப்பியாசம் செய்துவரும் வாலிபர்களும், வயோதிகர்களும் தங்களது பற்களை முத்துப்போல் பாதுகாத்துக் கொண்டு அதனால் பெரும் பாரங்களை பல்லால் தூக்கி அதன் சக்தியை நம் கண்முன் காண்பிப்பதையும் நாம் நன்கு அறிவோம்.

நம் சிறுபிராய முதல் பல்லை சரிவர கவனிக்காமல் வந்தால் எவ்விதத்திலும் பல்லில் நோய் உண்டாகிவிடும். அவ்விதம் உண்டானபிறகு பல் டாக்டரை தேடிபோகாமலோ அதை சுத்தம் செய்ய வழிதேடாமலோ இருந்தால் பலவித நோய்கள் ஏற்படும். பற்பசைகளைவிட வெல்லின் உமியைக் கரித்து அத்துடன் உப்பு கொஞ்சம் கலந்து தேய்ப்பது மிகவும் உசிதம். அவ்விதம் உபயோகித்தாலும் எதேனும் குச்சி கொண்டு தினம் இருவேலை பல்லை சுத்தம்செய்ய வேண்டியதுதான்.

பூகோளம்

ஆர். மெக்மிலன்.

அத்தியாயம் 3.

பூமியின் வேகம்.

(ஜூன் 1-ந்தேதி இதழின் தொடர்ச்சி)

ஒரு கிராமச் சிறுமியிடமிருந்து சில தினங்களுக்குமுன் ஒரு கடிதம் வரப்பெற்றேன். அதில் அவள் வீட்டில் அடைபட்டு வாழ்க்கையில் வெறுப்புற்று விட்டதாகவும், மனச் சோர்வு அடைந்து விட்டதாகவும் குறிப்பிட்டிருந்தாள்!

இவளைப் போன்ற எண்ணற்றவர்கள் இவ்வுலகிலிருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு இருப்பதற்கு உலகத்தின் தோற்றத்தைக்குறித்து அறிந்துகொள்ளாததே யாகும். அதை அறிந்துகொள்ளவும் பிரியப்படுவதில்லை.

அவள் இதை அறிந்திருந்தால் இராக் காலங்களில் வான வெளியில் படுத்துக் கொண்டு நட்சத்திரங்களை உற்று நோக்கிக் கொண்டிருந்தால் அவள்எத்தனை மைல்வேகத்தில் பிராயணம்செய்துக்கொண்டிருக்கிறாள்என்பதைஉணர்ந்திருப்பாள்.

இரவில் நமது இருதயம் துடிப்பதை தவிர வேறு எந்த கைய சப்தத்தையும் கேட்ப்பதில்லை.

இது நமது புலன் அறிவுறுத்தல். புலன் உணர்ச்சியை நம்பிவிடக்கூடாது. ஏனெனில் புலன் உணர்ச்சிப்படி இப் பூமி அசைவற்றதென்றும், ஒரு திடபதார்த்தம் என்றும் அறிகிறோம்.

சாதாரணமாக நீங்கள் உங்கள் புலன்களை நம்புவ தில்லை. பொதுவாக மக்களும் அப்படி தான்.

உண்மையை எப்பொழுதும் நம்புவதில்லை. இதனால் தான் உலகில் மனித வர்க்கம் துன்பமடைகின்றது.

காம் வசிக்கிற, நேசிக்கிற இப்பூவுலகம் காம் மனதால் அறியமுடியாத அவ்வளவு வேகமாக சுழல்கின்றது.

நீ ஒரு பீரங்கிக் குண்டு பாய்ந்து செல்வதைக் கண்டிருக்கிறாயா? பெரிய துப்பாக்கியே பார்க்க முடியாத உன்னால் எப்படி பீரங்கிக் குண்டை பார்த்திருக்க முடியும்?

16 அங்குல் வாயகலமுள்ள ஒரு பீரங்கி ஒரு டன் எடையுள்ள குண்டை ஒரு செக்கண்டில் 2000 அடிவேகத்தில் வெளியே வீசுகிறது. அதன் வேகத்தை உன் கண்ணால் பார்க்கவும் முடியாது.

ஒரு சமயம் எனக்கு சமீபத்தில் ஒரு பீரங்கிக்குண்டு வருவதைக்கண்டேன். அதை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். தரையில் விழுந்த பிறகு தான் குண்டைக்காண முடிந்தது. பீரங்கி வாயிலிருந்து புறப்பட்டு தரையில் வந்து சேர்ந்த வேகத்தை என் கண்ணால் பார்க்க முடியவில்லை.

ஒரு செக்கண்டுக்கு 2000 அடி வேகத்தில் செல்லும் ஒரு குண்டின் சுழற்சியை காண முடியாத நமது கண்களால் இப் பூமியின் சுழற்சியை எப்படி காணமுடியும்?

இன்று உச்சியில் சூரியனைப்பார்த்ததும் நடுப்பகல் என்று சொல்லுகிறாய். மறுநாளும் அதேயிடத்தில் சூரியனைக் கண்டவுடன் அப்பொழுது நடுப்பகல் என்று அறிந்து கொள்கிறாய். நடுப்பகலை உண்டுபண்ணுகிறது எது? அதை நான் விளக்கிச் சொல்லுகிறேன் கேள்.

சூரியன் ஒரே இடத்தில் நிற்கிறது. இப்பிரபஞ்சம் அதைச் சுற்றி வருகிறது. நீ வசிக்கிற பூமியின் பாகம் இன்று 12 மணிக்கு சூரியனுக்கு சமீபத்திலிருக்கிறது. அப்படியே பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருக்கிறதால் மறுநாளும் இதே பாகம் சூரியனுக்கு சமீபத்தில் வந்து விடுகிறது.

பூமியின் சுற்றளவு 25,000 மைலானால் தன்னைத்தானே சுற்றிக்கொள்வதற்கு 24 மணி நேரமானால் ஒரு மணிக்கு 1000 மைல் வேகத்திற்கு மேல் சுற்றுகிறது என்பது புலனாக வில்லையா?

மணிக்கு ஆயிர மைல் என்றால் ஒரு செக்கண்டுக்கு 1500 அடி வேகம் ஆகவில்லையா? இன்னும் சிறிது விளக்கிச் சொல்ல வேண்டுமானால் நிமிஷத்திற்கு 7 மைல் வேகத்தில் செல்லுகிறதென்று சொல்ல வேண்டும்!

நீ பூமி எப்படி தோன்றிற்று என்று கேட்க்கிறாய். அதற்குமுன், நீ பார்க்கிற பூமியைக்குறித்து முழு விபரமும் தெரிந்து கொள்ளவேண்டாமா? இதை உன்னால் உடனே உணரமுடியாது. சாதாரண கண்களால் கம்பமுடியாத விஷயத்தை நாம் அறிந்து கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

நான் சொன்னதை, ஒரு விளக்கும் பத்தையும் வைத்துக் கொண்டு பரீக்ஷித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். பந்தின் நடுவே நீண்ட ஊசியைக்குத்தி விளக்குக் கெதிரே வைத்து சுற்றினால் ஒருபகுதி வெளிச்சத்துக்கு நேரே இருப்பதும் மற்றொரு பகுதி இருளாயிருப்பதும் நன்கு விளங்கும். இப்படியே மாறி மாறி இருளும் வெளிச்சமும் வந்துகொண்டிருப்பதைக் காண்பாய்.

இதேமாதிரி இரவு, பகல், நாட்கள், மாதங்கள், வருடங்கள் பூமி மணிக்கு ஆயிரமைல் வேகத்தில் சுற்றுவதால் உண்டாகிறது! ஒவ்வொரு வருடத்திலும் குறிப்பிட்ட ஒரு நாள் மீண்டும் தோன்றுவதற்கு பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டால் போதுமா? இதற்காக சூரியனை பூமி சுற்றி வருகிறது.

சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் 93, 000, 000 மைல் என்பதை மறந்துவிடக் கூடாது. இவ்வளவு பெரிய தூரத்திற்கப்பாலிருந்து சூரியனைச் சுற்றி வருவதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை கணக்குப்போட்டு பார்க்கவேண்டியதவசியமாகும்.

சூரியனது குறுக்களவு 10 லட்சமைல் இவ்வளவு பெரிய கோளத்தை 930 லட்ச மைல்களுக்கப்பாலிருந்து கொண்டு சுற்றிஒருவருடத்திற்குமுன் தானிருந்தஇடத்திற்கேவரவேண்டுமானால் எத்தனை மைல் வேகத்தில் பிரயாணம் செய்யவேண்டுமென்பதை நீயே கணக்குப் போட்டுக்கொள்.

பூமி தன்னைத் தானே சுற்றிக்கொள்ள ஒரு மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுழலவேண்டியிருக்கிறது. சூரியனை சுற்றுவதில் நிமிஷத்துக்கு 1000 மைல் வேகத்திற்குமேல் செல்ல வேண்டியிருக்கிறது.

ஒரு மணிக்கு 60 நிமிஷங்கள் இந்த 60 நிமிஷத்தில் அது இதே வேகத்தில் செல்லுவதாயின் மணிக்கு 68 ஆயிரம்மைல் வேகத்தில் செல்லுகிறது.

மொழி ஆராய்ச்சி.

(ஸொராப்ஜி தாராபூர்வாலா எம். ஏ. பி. எல் டி.,)

கல்கத்தா சர்வகலாசாலையின் ஓப்பிலக்கண
மொழிப்பேராசிரியர்.

இந்திய காட்டிலே ஏராளமான மொழிகள் இருப்பதாக அந்நிய காட்டவர் குறை கூறுவது வழக்கமாயிருக்கிறது. இவ்விதம் குறைகூறும் அந்நியர் இந்தியாவையும் தம் நாடு போலவே கருதுகின்றனர். அவர்தம் காடுகள் மிகச் சிறியன. இந்தியா ஒரு சிறிய தேசமன்று; ஓரு சிறு கண்டமாகும். இந்திய மொழி விஷயமாக ஆலோசிக்கும்பொழுது இதையே நாம் கருத்திலிறுத்திக்கொள்ளல் வேண்டும். நாது பாரத காடு ருஷ்யா நீங்கலாக உள்ள ஐரோப்பாவின் அளவினது.

இதை உன்னால் உணரமுடியுமா? இது உனக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணும்.

இந்த பூமியன் கனம் 6,000,000,000,000,00 கோடி டன். என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு பெரிய பாரமான பூமி ஓரு செக்கண்டுக்கு பத்தொன்பது மைல் வேகத்தில் செல்கிறது என்றால் எவ்வளவு ஆச்சரியகரமானது!

இதை நினைக்க, உண்மையிலேயே உனக்கு எவ்வளவு பயமாயிருக்கிறது.

எவ்வளவுக்கெவ்வளவு நான் உயிரோடிருக்கிறேனோ அவ்வளக் கவ்வளவு புதிய புதிய ஞானத்தை பெறுகிறேன். இன்னும் அதிக காலம் நீடித்திருப்பேனாகில் அதைக்குறித்து நான் பெரும் மகிழ்ச்சியே யடைவேன். எனக்கு இவ்வாழ்வில் வெறுப்பே தட்டவில்லை. ஆனால் சாவைக் கண்டு அஞ்சப் போவதில்லை. எனெனில் இறப்புசகல உயிர் பிராயாணிகளுக்கும், சூரியனுக்கும் பூமிக்கும் கூடகுறித்த காலத்தில் வந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க முடியாது. ஒன்றும் நிலைத்திருக்கப் போவதில்லை. எல்லாம் அழியக் கூடியவைகளே.

(தொடரும்)

இந்தியாவின் மக்களும், அவர்தம் சரிதமும் ஐரோப்பாவினைப் போலவே பல்வேறு பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தியாவின் மொழி விஷயத்தை ஆராய்வதன் முன்பு ருஷ்யா நீங்கலாக உள்ள ஐரோப்பிய மொழிகளைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுவது அவசியமாகும். இந்தியா மொழியாராய்ச்சியில் எண்ணப் பட்டுள்ளபடி ஐரொப்பிய மொழிகளையும் கணக்கிடுவோமாயின் இரு காட்டிலுள்ள மொழிகளின் தொகையில் அதிக வித்தியாசமிராது. ஐரோப்பாவிலே போக்குவரவு சாதனங்கள் அதிகமுள்ளன; கல்வி வளர்ச்சியும் அதிகம். ஆகையினாலே ஐரோப்பியாவில் பேசப்படும் பாஷையில் அதிக வித்தியாசங்களில்லை. இந்தியாவின் போக்குவரவு வசதிகள்மட்டு. காடுகளும் மலைகளும் அதிகம். ஆகையினாலே பலவித பாஷைகள் பேசப்படுகின்றன. இந்தப் பாஷைகளில் சில சிறு சிறு பழங்குடிகளால் பேசப்படுகின்றன; பல பல்லாயிரக் கணக்கானவரால் பேசப்படுகின்றன; மற்றுஞ்சில, நூற்றுக் கணக்கினரால் பேசப்படுகின்றன. இந்த விதமாக இந்தியாவின் மொழிபாராய்ச்சி முடிவு பெறுகிறது. ஆயினும்இந்தியாவின் மொழி நிலையை முதன் முதலில் பார்க்கும் அந்நியர் எவரும் தவறாகக் கருதுவதற்கு ஏது விருக்கிறது.

ருஷ்யா நீங்கலாகவுள்ள ஐரோப்பாவைவிட இந்தியாவில் மொழிகள் அதிகமில்லையென்பதை எடுத்துக்காட்ட வேண்டுமாயின் இந்தியாவிலும் ருஷ்யா நீங்களாக உள்ள ஐரோப்பாவிலும் உள்ள முக்கிய மொழிகளை விவரிக்க வேண்டுவது அவசியமாகும்.

இந்தியாவை எடுத்துக்கொள்வோம் (பர்மா இலங்கை உள்பட)

இந்தோ – ஐரோப்பிய வர்க்க மொழி வருமாறு:—

உருது, இந்தி, மைதிலி (பிஹாரி) வங்காளி, அஸாமி ஓரிஸா, மாராத்தி, சிங்களம், சிந்தி, பஞ்சாபி, நேபாளி, மார்வாரி, (ராஜஸ்தானி) குஜராதி, பாரசீகம, பலூசி, ஆப்கான்.

திராவிட வர்க்கத்தைச் சேர்ந்த மொழிகள் வருமாறு:—

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்.
மற்றவை:—

பண்டைத் தமிழர்.

(பண்டிதர், சேலம் ஜி. அப்பாதுரையார்.)

உலகில் நாகரிகம் பெற்ற நாடுகளாகக் கருதப்படுவனவற்றுளெல்லாம் தமிழாரியனைச் குடிபுக்கு வாழ்ந்து வருகின்றனரென்பது எண்டு உலகம் அறியக்கிடப்பதோர் உண்மையாம். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் தமிழ் முது மக்கள் உலகின் எண்டிசா முகங்களிலும் பரந்து கிடக்த பற்பல நாடுகட்கும் நிலவழியாலும் வெளி நீர்க் கடவெவழியாலும் சென்றடைந்து தமிழகத்தின் சிறப்பைத் திகழ்தர நாட்டிச் செல்வமீட்டு மீண்டனரென்பது சான்றோராற் புகழப்பட்டேந்துக்கொள்ளும் சரித்திரச் சான்றுகளாம். கி மு. நான்காம் நூற்றாண்டில் சிரியாகரீஸ் முதலிய நாடுகளுக்கும் சேர, சோழ, பாண்டிய நாடுகட்கும் தொடர்பிருந்து வந்திருக்கின்றன வென்பது சரித்திரக் குறிப்புகளாலும் அவ்வவ்நாடுகளில் வழங்கும் சொற்களாலும் அறியக் கிடக்கின்றது. யாவனர் நாவலந்தீவினும் (இந்தியா) தமிழகத்தினும் குடி புகுவதற்குத் தமிழ் முது மக்களே அவர்கட்கு வழிகாட்டியாயிருந்தனரென்பதும் யவனத்தீவினின்று யவனரையுடனழைத்து வந்தனரென்பதும் ஒருதலை. கி. மு. 20-ம்

திபெத்து, பர்மிய மொழிகள் ஆக மொத்தம் 22 மொழிகள் முக்கியமாயிருக்கின்றன.

ஐரோப்பாவிலுள்ள மொழிகளை எடுத்துக்கொள்வோம்.

இந்தோ-ஐரோப்பிய வர்க்க மொழிகள் வருமாறு:—

இங்கிலீஸ், டச்சு, ஜெர்மன், ஸ்வீடி, டேனோ, கார்வீஜியன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்த்சுகீஸ், இதாலியன், ரூமேனியன், கிரீக், ஆல்பேனியன், ஐரிஷ், வெல்டி, போலிஷ், செக், செர்வியன், பல்கேரியன்.

மற்றவர்க்க மொழிகள் வருமாறு:—

ஹங்கேரியன், பின்னிஷ், துருக்கி ஆகிய எல்லாம் சேர்ந்து 21 மொழிகளாகின்றன.

ஆண்டில் அகஸ்டஸ் ராயனிடம் பாண்டியவரசன் தூதனுப்பி கட்புப்பூண்டிருந்தானென்பது பழைய யவனாசிரியர்கள் குறிப்புகளால் விளங்குவதுடன், பாண்டியனது காணயங்கள் யவனாட்டிலும் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் மகத தேசத்தில் தலைநகரில் வசித்து வந்த மெகிஸ்தனிஸ் என்ற யவனாசிரியர் பாண்டிய இராஜியத்தைப்பற்றியும் நன்கு வரைந்திருக்கிறார். அசோக மன்னரது ஆரம்பக் கற்பதிவுகளிலேயே சேர சோழ பாண்டியரது தமிழகத்தை யுயர்ந்த நிலையில் வைத்தெழுதப்பட்டிருக்கிறது. கி. மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கையை அரசாண்டு கொண்டிருந்த விஜயன் என்னும் அரசன் பாண்டியன் மகளை மணந்திருந்ததாகக்காணக்கிடக்கின்றது. சங்கமரீஇய இலக்கியங்களில் மிகச் சிறந்ததாகவும், சரித்திரத் தொடர்புடையதாகவும் கருதப்படும் மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய காவியங்களிற் கருத்தூன்றிக் கவனிப்போமானால் திரைகடலோடி திரவியந்தேடப் புறப்பட்ட தமிழர் ஆண்டுகட்கணக்காகக் கணைகடலிற் கப்பல்கொண்டு சஞ்சரித்து மீண்டதாக இனிது காணலாம்.

இங்ஙனம் தமிழகத்தில் வதிந்துவந்த தமிழர் பற்பல தீவுகட்கும் நாடுகட்கும் சென்றிருந்தனர் என்பதும், சேர, சோழ பாண்டிய நாடுகளாகிய மூப்பிரிவின் தமிழகத்திலும் இயற்கை வளமார்ந்த கடற்றுறை முகங்கள் இனிதமைந்து எழில்வளம் பெருகத் துணைதந்து வந்ததென்பதும், தமிழர்கடாம் முதன் முதலிற் கப்பற் கருவிகொண்டு கடற்கடரை கண்டு கடல்வளம் பெருக்கினரென்பதும், நிலநூல் வல்லார் நிலைப்படுத்துமோர் நெறியுடைச் சான்றுகளாம். ஆற்றலும் போற்றலுமிக்க தமிழரது தொன்மை இவ்வாறு கிடக்க.

தமிழரைப் பிற தேயத்தினின்று குடியேறியவரொன்று நிலைநாட்டப்புக்கு இடர்படுவார் பலராவார். தமிழர் மத்திய ஆசியாப் பகுதிகளிலிருந்து குடியேறியவரா யிருக்கலாமென்கிறார் ஆசிரியர் கால்ட்பெல், திராவிடர் (தமிழர்) பலுச்சிஸ்தான வழியாக வங்காளத்தை நண்ணி கங்கைக்

கரையைப் பற்றித் தமிழகத்தில் புகுந்தவராவர் என்று "பூர்வீக இந்தியா" என்னும் நூலில் ராபின்ஸன் என்பவர் கூறுகிறார். அக்கோடியா, பாலஸ்தீனம் இவ்விடங்களிலிருந்து குடியேறிவாராயிருக்கலாமென்று தடுமாறுவார் வேறு சிலர். தமிழர் மங்கோலியரே என்று கூறுவாறுமுளர். தமிழ் மொழியும் சீன மோழியும் பெரிதும் ஒத்திருக்கின்ற காரணங் கொண்டும், சரித்திர ஆரம்பந்தொட்டு சீனருக்கும், இக்காட்டவர்க்கும் இருந்துவரும் தொடர்பு கொண்டும் தமிழர் சீனரேயாவர் என்று தோழர் கனகசபை அவர்கள் கூறியுள்ளார். மற்றும் பலவாறு கூறுவாருமுளர்.

நாவலந்தீவென்றும் நாகைகாடென்றும் இக்காட்டை (இந்தியாவை)த் தொன்னூற்கள் பலவற்றுள்ளும் வழங்கப் பட்டிருத்தலானும் காகரென்போரே இந்காட்டின் பழங்குடிகளாவரென்று கருதப்படுவதாலும் காகங்கள் (பாம்புகள்) போல் பூமிக்குக் கீழ் (பாதாளத்தில்) இருந்து மேல் நிலம் அடைந்தவரே தமிழர் என்று கூறுதற்குத்தான் எவ்வாசிரியரும் முன்வரவில்லை. அண்டத்தில் உலவும் செவ்வாய் உலகத்தைப்பற்றியும், வான ஊர்த்தியின் இயக்கங்கள் பற்றியும் போதிய அறிவை அக்கால சரித்திராசிரியர்கள் பெற்றிருக்கவில்லை ஆகையால் வானத்தினின்று இறங்கியவரே தமிழர் என்று கூறுதற்கும் எவரும் இலராயினர். அம்மட்டில் அதுகன்றென்றே கருதுகின்றோம்.

கி. மு. பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரே சீனாவிற்கும் தமிழகத்திற்கும் கடல் வழியாக வணிக முறையில் தொடர்பிருந்ததென்பதும், தமிழ் முதுமக்கள் வணிகத்தில் தலைசிறந்தவர்களாக விளங்கி வந்ததால் சீனாவிற் குடியேறி சீனரை நாகரிக நிலையில் மேம்படுத்தி வந்தனரென்பதும், சீனாவினின்றும் பல பொருட்கள் தமிழ் நாட்டில் இறக்குமதியாகப்பட்டு வந்தனவென்றும் சர். என்றியூல் என்பார் ஆராய்ந்து கூறியவற்றால் நன்கறியலாம். ஆகவே சீன மொழிக்கும் தமிழ் மொழிக்கும் ஒற்றுமை காணப்படின் இயல்பென்றேற்க வேண்டுமே தவிர வியப்படைதற்கின்றாம். ஆதலின் மொழி

யொற்றுமைச் சிறிது கொண்டு தமிழரே சீனராவர் என்று கூறுதல் பொறுத்த முடைத்தன்றாம்.

தொன்மைத் தமிழர் தமிழகத்தினின்றும் பல்வேறு தேயங்கட்குச் சென்றுளாரென்று அறிதற்குக் கிடைக்கும் சான்று போன்று; பிற தேயத்தினின்று தமிழகத்திற் குடி புகுந்தவரே தமிழர் என்று கூறுதற்குச் சிறிதும் சான்றுகள் காணாதிருந்தும் அவ்விதம் கற்பிக்க முயன்ற சரித்திராசிரியர் பலரும் இடர் பாடுடன் இயம்பி இறுதி காணாதொழிய ஏனோ முற்பட்டனரென்பது யாமறியக்கூடவில்லை. ''செந் தமிழ் இயற்கை சிவணிய நிலம்'' என்று புகழப்படும் நிலப் பரப்பின் கண்ணே தோன்றிப் பெருகி வாழ்ந்து தமிழ் மொழி யாகிய இயற்கை பொலிக் குறிப்பு அமைந்த மொழியினையே இனிது பேசி தனிப்பெருமையுடைய ஒழுக்கமுடையோராய் வாழ்ந்து வருகின்றனர் என்று கூறுவதற்குச் சிறிதும் முரண் பாடு காணாதிருக்க அங்ஙனம் கூறாது ஒழிந்தது பெரிதும் வியப்பாம்.

மக்களும் உயிர் வர்க்கமும் தோன்றுதற்கு பூமத்திய ரேகையைச் சார்ந்த விடங்களே ஏற்றதென்றும், அவ்விடங் களின் வெட்பதட்பம் உயிர் வர்க்கம் பெருதற்குத் தகுந்ததென் றும் உயிர் நூற்புலவர் இயம்பா நிற்பர். தமிழகம் பூமத்திய ரேகையைச் சார்ந்த நிலப்பரப்பும், நிலை சிறப்பும் அமைந்த தொன்றாயிருத்தலின் தமிழ் முது மக்கள் அங்கு தோன்றிப் பெருகி வாழ்ந்து பல்வேறிடங்கட்குச் சென்றி தமிழகம் போந்துறைவாரெனீறு கொள்ளுதலே சால்புடைத்தாம். கடற் பிராணிகளும் முதலில் தமிழகத்தில் தோன்றி யிருக்கக் கூடுமென்பதற்குத் திருச்சி, கஞ்சை முதலிய பண்டங்களில் காணப்படும் பண்டைக்கடற் பொருட் காட்சிகளே போதிய சான்றாகும்.

———

மனோ வியாதிக்குக் காரணம்.

ஒருவர் எவ்வளவு பெரிய மேதாவியாக இருந்த போதிலும் சரி. அதைப்பற்றி நாஜிகள் கவலைப்படுவ தில்லை. பிறவியில் யூதரென்றால் எப்படியாவது அவரை ஒழித்துவிட வேண்டுமென்றுதான் ஹிட்லர் கோஷ்டியார் வழி தேடுவார்கள். உலகப்பிரசித்திப்பெற்ற விஞ்ஞான நிபு ணராகிய புரோபஸர் ஈன்ஸ்டின் ஜெர்மனியிலிருந்து வெளி யேறியது இதற்கு ஓர் பழைய உதாரணம். பிரக்யாதி வாய்ந்த மனோதத்துவ சாஸ்திரியாகிய புரோபஸர் ஸிக்மண்ட் புருடு நாஜிகளின் கொடுமைகளுக்கு அஞ்சி ஆஸ்திரியாவிலிருந்து இங்கிலாந்தை வந்தடைந்திருப்பது சமீபகால உதாரணம். மகா மேதாவிகளான இவர்களுடைய கதியே இவ்விதமாக இருக்கும்பொழுது மற்ற சாதாரண யூதர்களைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஹிட்லரின் இராணுவங்கள் ஆஸ் திரியாவைக் 'கைப்பற்றியது' முதல் அங்கிருந்து சுமார் மூவா யிரம் யூதர்கள் பிரிட்டனுக்கு இதுவரை ஓடி வந்திருக்கிறார் கள். இன்னும் சுமார் 180,000 யூதர்கள் வெளியேறத் துடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவகையில் அதிர்ஷ்டசாலி

புரோபஸர் புருடு அவர்களை ஒருவகையில் அதிர்ஷ்ட சாலி என்றே சொல்லவேண்டும். ஏனெனில், அவர் புறப் பட்ட தினத்திற்கு ஒரு நாள் முன்னதாகத்தான் ஐபாயிரம் யூதர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் கைது செய் யப்பட்டதற்கு, பந்தோபஸ்து முகாம்களில் மற்றும் பலரை அடைத்துவைக்க இடமிருந்ததென்பதைத் தவிர வேறு ஒரு காரணமும் இருந்ததாகத் தெரியவில்லை.

ஆரம்பத்தில் 'யூதர் வேட்டை' ஜெர்மனில் மட்டுமே நடந்து வந்தது. இப்பொழுதோ ஆஸ்திரியாவிலும் முழுமை

மாக ஆரம்பித்துவிட்டது. எனவே, ஜெர்மனியிலிருந்த யூதர்களைப்போல் ஆஸ்திரியாவிலுள்ள யூதர்களும் எப்படியாவது வெளியேறி விடவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். மிகுந்த பிரயாசையுடன் அதிகாரிகளோடு கடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனாகவே புரொபஸர் புருடு ஆஸ்திரியாவை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டார். அவர் தமது வாழ்க்கையின் மிகுதிப் பாகத்தை இங்கிலாந்தில் கழிக்க உத்தேசித்திருக்கிறார்.

விக்டோரியா ஸ்டேஷனில் வரவேற்பு.

புரோபஸர் புருடுவிற்கு இப்பொழுது 82-வயதாகிறது. சரீரக்கட்டு தளர்ந்துபோய்விட்ட பொழுதிலும் அவருடைய ஊக்கமும், உற்சாகமும் முன்போலவே யிருக்கின்றன. மனோதத்துவ சாஸ்திரத்தைப் பற்றிய புத்தகங்களை அவர் இன்னமும் எழுதிக்கொண்டிருக்கிறார். இது வரை அவர் எழுதியுள்ள நூல்கள் உலகமுழுவதும் பரவியிருக்கின்றன. அவைகளைப் பாராட்டாதவர்கள் அநேகமாக ஒருவருமில்லை. விஞ்ஞான சாஸ்திர உலகில் அவருக்கு மிகுந்த மதிப்புண்டு. ஆகையால் வியன்னாவிலிருந்து புறப்பட்டு விக்டோரியா ஸ்டேஷனில் அவர் வந்திறங்கியபொழுது அவரை வரவேற்பதற்காகத் திரளான ஜனங்கள் குழுமியிருந்தார்களென்றால் ஒருவரும் ஆச்சரியப்படமாட்டார்கள்.

புரொபஸர் புருடுவின் புதல்வியான ஆனாபுருடுவை ஒரு நிருபர் பேட்டி கண்டபொழுது "எனது தந்தை இங்கிலாந்தில் கல்வி பயின்றவராதலால் இத்தேசத்தை ரொம்பவும் நேசிக்கின்றார்" என்று கூறினார்.

புரொபஸர் புருடு ஒரு யூத வியாபாரியின் புதல்வர். அவர் தமது பாலப் பருவத்தை வியன்னாவிலும் வாலிபப் பருவத்தை இங்கிலாந்திலும் கழித்தார். 1881-ம் வருடம் வைத்தியப் பரீட்சையில் அவர் பட்டம் பெற்றார். பிரபல வியன்னா டாக்டரான ப்ரூயரைச் சந்தித்த பிறகு புரோபஸர் புருடுவின் வாழ்க்கையில் முக்கியமான பகுதி ஆரம்பமாயிற்று.

1885-ம் வருடம் புரோபஸர் புருடு பாரிசுக்குச் சென்று சார்கோட் என்ற விஞ்ஞான நிபுணரிடம் பயிற்சி பெறலா

னார். சித்தப் பிரமையுள்ள சிலருக்கு சிகிச்சை செய்து கொண்டிருந்தபொழுது "இதைப் போலொத்த நோய்கள் சிற்றின்ப மோகத்திலிருந்து ஆரம்பமாகின்றன" என்று சார்கோட் கூறினார். இவ்வாறு தற்செயலாக அவர் கூறியது புரொபஸர் புருடுவிற்கு ஞானோபதேசம் செய்ததைப் போலிருந்தது. மனோ வியாதிகளுக்குச் சிற்றின்ப மோகம் காரணமாயிருக்க முடியுமா வென்பதைப்பற்றி அவர் ஆராய்ச்சி செய்யவாரம்பித்தார் இந்த ஆராய்ச்சிகள் தான் அவரைப் பெரிய மேதாவியாக்கின. "சகலவிதமான மனோ வியாதிகளும் சிற்றின்ப உணர்ச்சிகளிலிருந்து தான் ஆரம்பமாகின்றன. இந்த உணர்ச்சியைக் கட்டுப்பாடில்லாது திருப்தி செய்வதுதான் மனோவியாதிகளுக்கு கைகண்ட மருந்து" என்பது புரொபஸர் புருடுவின் சித்தாந்தம்.

"மனிதனின் மூளையை ஒரு பனிக்கட்டிக்கு ஒப்பிடலாம். இதில் ஐந்திலொருபாகம் மேலே மிதக்கிறது! மற்ற நான்கு பாகங்களும் மனிதனின் உணர்ச்சிகளுக்குக்கூட கட்டுப்படாமல் கீழே அழுந்தியிருக்கின்றன. அழுந்தியிருக்கும் இந்த நான்கு பாகங்கள் தான் மனச்சோர்வு; பயித்தியம் முதலான நோய்களுக்குக் காரணம்."

இதை புரோபஸர் புருடு தமது நூல்களிலெல்லாம் வற்புறுத்தியிருக்கிறார். மூளை வியாதியினால் கஷ்டப்படுகின்றவனுக்கு சிகிச்சை செய்ய வேண்டுமாயின் அவனுடைய மனதிற்குத் தொந்தரவைக்கொடுத்துவரும் பொருள் என்ன வென்பதை 'அழுந்தியுள்ள மூளையின்பாகத்திலிருந்து' கண்டுபிடித்து அதை அவன் முன்னால் காட்டவேண்டுமென்று புரோபஸர் புருடு கூறுகிறார். இக்காரணத்தை முன்னிட்டே மூளை பரிசோதனையை ஆரம்பிப்பதன் முன்னால், நோயாளிகள் எத்தகைய கனவுகளைக் காண்கின்றார்களென்பதை விசாரித்தறிய வேண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார்.

டாக்டர்கள் கைகொட்டிச் சிரித்தனர்

மூளை வியாதியஸ்தர்களுக்கு சிகிச்சை செய்வதானால் அவர்களுக்கு ஏற்படும் கனவுகளை முன்னதாக விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று புரோபஸர் புருடு சொல்லியபொழுது பட்டம்பெற்ற டாக்டர்கள் ஆரம்பத்தில் பரிகசித்தார்கள். எனினும், இதனால் அவர் சோர்வடைந்து விட

வில்லை. அவருடைய ஊக்கமும் குன்றிவிடவில்லை. புரொபஸர் புரூயருடன் சேர்ந்து 1893-ம் வருடம் தமது முதலாவது நூலை அவர் வெளியிட்டார். அந்த வருடம் இவ்விருவருக்குமிருந்த தொடர்பு அறுந்துபோயிற்று. 1905-ம் வருடம்வரை புரோபஸர் புரூடு ஏகாங்கியாகவே ஆராய்ச்சிளை நடத்தி வந்தார். பிறகு தான் பலர் அவருடன் சேர்ந்தனர். 1908-ம் வருடம் முதலாவது அகில உலகமனோதத்துவ நிபுணர்களின் மகாநாட்டை அவர் கூட்டினார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு மனோதத்துவ சர்வதேசசங்கம் என்று ஒரு ஸ்தாபனத்தை அவர் ஏற்படுத்தினார். அதனுடைய கிளைகள் இன்று அனேக நாடுகளிலிருக்கின்றன.

தற்சமயம் புரோபஸர் புரூடு பைபிளைப்பற்றி ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார். இதன் ஒரு பகுதி ஏற்கனவே பிரசுரமாகி விட்டது. அந்தப் பகுதியில் மோஸஸ் எகிப்தியர் என்று அவர் கூறியிருக்கிறார்.

புரோபஸர் புரூடுவை மனோதத்துவ சாஸ்திரத்தின் சிருஷ்டிகர்த்தாவென்று சொன்னாலும் தகும். இதன் மலர்ச்சிக்காக அவர் செய்திருக்கும் சேவைகள் மகத்தானவை. இன்னும் சிறப்பாகச்சேவை செய்வதற்காகவே அவர் நாஜி ஆஸ்திரியாவைவிட்டு நிம்மதியான தங்குமிடத்தைநாடி இங்கிலாந்திற்கு வந்திருக்கிறார்.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)=(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	...	...	ரூ. 0 5 0
பிரகிருதிவாதம்	...	...	,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	...	,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	...	,, 0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மைபென்ன?	...	...	,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	...	,, 0 3 0
கடவுள்	...	...	,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	...	...	,, 0 3 0
வால்டேர்	...	...	,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு	...	...	,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A, L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	...	,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	...	...	,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மாயப்புரட்சி	...	...	,, 0 4 0

தோழர் V. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெயஞ்ஞான முறையுய மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்	0 6 0
ஷை	2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
ஷை	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும்	...	...	,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“நான்காம் பதிப்பு”)	...	...	,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா?	(ல. ப. நூ. பி.)		0 4

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்)	0	8	0
2.	வெளியும், மதமும்	0	4	0
3.	பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஎன் இவ்வளவிரக்கமில்லை	0	1	0
6	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7	,, அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் சன்சகம்பதிப்பு200பக்கம்	0	5	0
11.	தர்ம பரிசை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்காரும் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சர்தேசாய் (ச. வே. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	1	0
16.	இராவணன் கலாசிவன் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாட்டு	0	2	0
18.	கதர் மகாத்மியம் (இன்னிசை)	0	2	0
19.	பார்ப்பன உபாயசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷிக் முறை	0	1	0
22.	ச. வே. ரா இளமை உபாயசம்	0	0	9
23.	சமதர்ம உபாயசம்	0	0	6
24.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
25.	மறுமதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (அரிபதுவம்)	0	4	0
28.	புது சட்டம் (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கற்பு அடகு	0	6	0
31.	சமணர் பெரியர்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	காலம் எங்கே?	0	2	0
34.	ஜாதிமை குறிக்கழி	0	4	0
35.	கலைக்டர்பாளம் அல்லது கைவல்யங்கட்டினார்	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakkam Press, Erode.